20.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மரங்களுக்கு கலை வடிவம்: உயிரூட்ட புதுமை திட்டம்

பெங்களூரு,:இயற்கைச் சீற்றங்களால் சாயும் மரங்களை ஏலம் விடாமல், அவற்றில் வன விலங்கள், பறவைகளை வடிவமைத்து, கலை வடிவம் கொடுப்பதோடு, வன உயிரினங்கள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தோட்டக்கலைத் துறை திட்டமிட்டுள்ளது.இதற்கு சிற்பக்கலை அகாடமியும், கன்னடம் மற்றும் கலாசாரத் துறையும் ஒத்துழைப்பு அளிப்பதாக கூறியுள்ளன. இதனால், பெங்களூரு கப்பன் பூங்காவில், பயனற்றுக் கிடக்கும் மரங்களில் இனி புலி, சிங்கம் போன்ற உருவங்கள் தலையெடுக்கவுள்ளன. இயற்கைச் சீற்றங்களால் சாயும் மரங்களை, வனத்துறையின் அனுமதியுடன் ஏலம் விடுவது வழக்கமாக இருந்தது. தற்போது, இம்மரங்களுக்கு கலை வடிவம் தர, தோட்டக்கலைத் துறை முன்வந்துள்ளது.கப்பன் பூங்காவில் பொதுமக்கள், புலி, சிங்கம், மயில் போன்ற உயிரினங்களை பார்க்க முடியாவிட்டாலும், கலை வடிவமாக கண்டு ரசிக்கும் வாய்ப்பு கிடைக்கவுள்ளது. இதற்காக, மரத்திண்டுகளை பயன்படுத்தி, வன விலங்குகள், பறவைகளின் உருவங்களில் இருக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

தோட்டக்கலை மற்றும் கன்னட கலாசாரத் துறைகள் ஒருங்கிணைப்பில், கப்பன் பூங்காவில், 13ம் தேதி முதல் சிற்பக்கலை முகாம் நடைபெற்று வருகிறது. மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், மூத்த சிற்பக்கலைஞர்கள், உதவி

சிற்பிகள் வர உள்ளனர்.இவர்கள் பெங்களூரின் மத்திய நூலகம், தோட்டக்கலைத் துறை அதிகாரிகளின் அலுவலகங்கள், பேண்ட் ஸ்டாண்ட் வளாகத்தில், மூன்று குழுக்களாக பிரிந்து, விலங்குகள், பறவைகள் என, சுற்றுச்சூழலுக்கு தொடர்புடைய, பூங்காக்களுக்கு சம்பந்தப்பட்ட கலை வடிவங்களை படைக்க உள்ளனர். 14 நாட்கள் வரை, வீழ்ந்து கிடக்கும் மரங்களுக்கு உயிரூட்ட உள்ளனர். ஏற்கனவே, சிற்ப கலைஞர் ஜான் தேவராஜ், கப்பன் பூங்காவில் ஒரு மரத்திண்டை பயன்படுத்தி, மனிதன், சாலுமர திம்மக்கா, சிங்கம் ஆகிய உருவங்களை செதுக்கி, அந்த மரத்துக்கு உயிர் கொடுத்துள்ளார். இதன் மூலம் மரக்கட்டையை எரித்து சாம்பலாக்குவதற்கு பதிலாக, இயற்கையை பயன்படுத்தி இயற்கையை காப்பாற்றுவது எப்படி என, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மஹாந்தேஷ் கூறுகையில், "கப்பன் பூங்காவில், வன விலங்குகளின் சிற்பங்களை வடிவமைக்கும் திட்டத்திற்கு ஆலோசனை கூறியவரே, சிற்ப கலைஞர் ஜான் தேவராஜ் தான். அத்துடன் நிற்காமல், அங்கே சாய்ந்து கிடந்த மரத்தில், சிங்கத்தின் உருவத்தை செதுக்கினார்; இதேபோன்று செய்யலாம் என்றார். அதன்படியே, சாய்ந்து கிடக்கும் மரத்திண்டுகளில் கலை வடிவங்களை உருவாக்கும் முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது," என்றார்.

## 2,000 டன் சாத்துக்குடி வருகிறது



தமிழகத்தில், நாளை ஆயுத பூஜை கொண்டாடப்படுகிறது. வீடுகளில் மட்டுமின்றி, அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், வர்த்தக நிறுவனங்களில் ஆயுத பூஜை நடைபெறும். பூஜையில், பொரி, கடலை, ஆப்பிள், சாத்துக்குடி, வாழைப்பழம் போன்றவை இடம் பெறும். இந்த ஆண்டு, ஜம்மு - காஷ்மீர், ஹிமாச்சல பிரதேசம் மாநிலங்களில், ஆப்பிள் விளைச்சல் அமோகமாக உள்ளது. அதனால், ஆப்பிள் வரத்து அதிகமாக இருக்கிறது. அதேபோல், ஆந்திராவின் கடப்பா, அனந்தபூர் மாவட்டங்களில், சாத்துக்குடி விளைச்சல் களை கட்டியுள்ளது. ஆயுத பூஜைக்காக, அங்கிருந்து, 2,000 டன் சாத்துக்குடியை, தமிழகம் கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.கோயம்பேடு மார்க்கெட், சாத்துக்குடி மொத்த விற்பனையாளர் வேலா கூறியதாவது:கடந்த ஆண்டு, விளைச்சல் குறைவாக இருந்ததால், சாத்துக்குடிக்கு தட்டுப்பாடு இருந்தது; விலையும் அதிகரித்தது. இந்த ஆண்டு, சாத்துக்குடி விளைச்சல் இயல்பாக உள்ளது. ஆந்திராவில் இருந்து, 200 லாரிகள் மூலம், 2,000 டன் சாத்துக்குடி விற்பனைக்கு எடுத்து வரப்படும். இதற்காக, ஆந்திர மாநில சாத்துக்குடி விவசாயிகளிடம், ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இன்று முதல், 23ம் தேதி வரை ஆயுத பூஜை விற்பனை நடக்கும். தற்போது, மூன்று ரகங்களாக பிரித்து, ஒரு கிலோ,

25 - 40 ரூபாய் வரை சாத்துக்குடி விற்பனையாகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## மழையால் நிரம்பும் அணைகள்

மதுரை:மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் பெய்யும் மழையால், அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. இம்மாவட்டங்களில் சில வாரங்களாக மாலையில் மழை பெய்து வருகிறது. பெரியாறு, வைகை, மஞ்சளாறு, மருதாநதி அணைகள் நிரம்பி வருகின்றன. பாசனப்பரப்பு பகுதிகளில் ஓரளவு பெய்த மழையால் விவசாய பணிகள் துவங்கியுள்ளன.மழை அளவு விபரம்( மி.மீ.,)



மதுரை, அக். 20—

மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் பெய்யும் மழையால், அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. மதுரையில் அதிகபட்சமாக தனியாமங்கலத்தில் 37 மி.மீ., மழை பதிவானது.

இம்மாவட்டங்களில் சில வாரங்களாக மாலையில் மழை பெய்து வருகிறது. பெரியாறு, வைகை, மஞ்சளாறு, மருதாநதி அணைகள் நிரம்பி வருகின்றன. பாசனப்பரப்பு பகுதிகளில் ஓரளவு பெய்த மழையால் விவசாய பணிகள் துவங்கியுள்ளன.

**மழை அளவு விபரம்[ மி.மீ.,]**

பெரியாறு 5, தேக்கடி 3, கூடலூார் 10, சண்முகாநதி 2, வைகை 1.8, சோத்துப் பாறை 6, பேரணை 3, ஆண்டிபட்டி 6, மதுரை 14, சாத்தையாறு 7, மேட்டுப் பட்டி 10, கள்ளந்திரி 10, சிட்டம்பட்டி 17.5, மேலூார் 25.2, புலிப்பட்டி 30.6, இடையப்பட்டி 19.2, விரகனூார் 19.8, கொடைக்கானல் 4.2.

**அணைகளுக்கு நீர்வரத்து**

பெரியாறு அணையின் மொத்த உயரம் 152 அடி. தற்போதைய நீர் மட்டம் 118.30 அடி. நீர் இருப்பு 2,321 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 513 கனஅடி. வெளியேற்றம் 513 கனஅடி.

வைகை அணையின் மொத்த உயரம் 71 அடி. தற்போதைய நீர் மட்டம் 47.15 அடி. நீர் இருப்பு 1,638 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 381 கனஅடி. வெளியேற்றம் 960 கனஅடி.

மஞ்சளாறு அணையின் மொத்த உயரம் 57 அடி. அணை நீர்மட்டம் 56.80 அடி. நீர் இருப்பு 472.64 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 49 கனஅடி. வெளியேற்றம் 49 கனஅடி.

மருதாநதி அணையின் மொத்த உயரம் 64 அடி. நீர் மட்டம் 59.83 அடி. நீர் இருப்பு 161.500 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 48 கனஅடி. வெளியேற்றம் 90 கனஅடி.

சோத்துப்பாறை அணையின் உயரம் 126 அடி. தற்போதைய நீர் மட்டம் 109.22 அடி. நீர் இருப்பு 73.22 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 30 கனஅடி. வெளியேற்றம் 03.00 கனஅடி.

சண்முகாநதி அணையின் உயரம் 52.50 அடி. தற்போதைய நீர் மட்டம் 28.00 அடி. நீர் இருப்பு 19.79 மில்லியன் கனஅடி. நீர் வரத்து. வெளியேற்றம் இல்லை.

## காய்கறி விலை அதிகரிப்பு

ஒட்டன்சத்திரம்:மழை காரணமாக வரத்து குறைந்ததால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் காய்கறி விலை அதிகரித்துள்ளது.கடந்த சில நாட்களாக பல இடங்களில் மழை பெய்ததால் காய்கறி மகசூல் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக மார்க்கெட்டில் காய்கறி வரத்து குறைந்தது. தற்போது திருமணம் உட்பட முக்கியநிகழ்ச்சிகள் அதிகமாக நடப்பதால், தேவைக்கேற்ப காய்கறி கிடைக்கவில்லை. இதனால் காய்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.இம்மாத துவக்கத்தில் ஒரு கிலோ பீன்ஸ் ரூ.7க்கு விற்றது. தற்போது ரூ.35 ஆக உள்ளது. ரூ.17க்கு விற்ற பாகற்காய் ரூ.26க்கும், ரூ.10க்கு விற்ற பீர்க்கங்காய் ரூ.20க்கும், ரூ.8க்கு விற்ற தக்காளி ரூ.13க்கும் விற்றன.

## அரளி கிலோ ரூ. 300; கனகாம்பரம் ரூ.800 ஆயுதபூஜையால் கதம்ப பூக்களுக்கு மவுசு

நிலக்கோட்டை:ஆயுதபூஜையை முன்னிட்டு கதம்ப பூக்களுக்கு கிராக்கி அதிகரித்து உள்ளதால் அரளி கிலோ ரூ. 300க்கு விற்பனையானது. மழையால் வரத்து குறைந்த கனகாம்பரம் கிலோ ரூ. 800க்கு விற்றது.தமிழகம் முழுவதும் ஆயுதபூஜைக்கு முந்தைய 9 நாட்கள் நவராத்திரியாக கொண்டாடப்படுகிறது. அதேபோல் கர்நாடகம், ஆந்திராவில் தசராவாக நடக்கிறது.ஆகையால் இந்த நாட்களில் தெய்வங்களுக்கு படைக்க உகந்த தேங்காய், வாழைப்பழம், பூக்கள் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. வத்தலக்குண்டு வாழைக்காய் கமிஷன் கடையில், வாழைத்தார் கடந்த வாரம் இரு மடங்கு விலை அதிகரித்தது. அதே போல் கதம்ப மாலைக்கு தேவையான அரளி, சம்பங்கி, செண்டு, மருகு, மரிக்கொழுந்து, கோழிகொண்டை, வாடாமல்லி பூக்கள் விலை அதிகரித்துள்ளன.நிலக்கோட்டை பூ சந்தையில் ஒரு கிலோ அரளி ரூ. 300 (பழைய விலை ரூ.80), சம்பங்கி ரூ. 200 (ரூ.80), மரிக்கொழுந்து, மருகு ரூ. 150 (ரூ.50), செண்டு, கோழிகொண்டை ரூ. 40 (ரூ.30), வாடாமல்லி ரூ. 30க்கு விற்பனை ஆனது. மழையால் சந்தைக்கு கனகாம்பரம் 4 கிலோ மட்டும் விற்பனைக்கு வந்ததால் கிலோ ரூ. 700 முதல் 800க்கு

விற்பனையானது. மல்லி ரூ. 250, முல்லை ரூ. 50க்கு விற்பனையானது. துளசி வரத்து அதிகரித்ததால் ரூ. 10 க்கு விற்றது. ஆயுதபூஜை வரை இதே விலை கிடைக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.ஆனால் பூக்களை வாங்குவோர் விலையை கேட்டதும் பலர் மலைத்து, வாங்கும் அளவை குறைத்து வாங்கினர்.

**தள்ளிப்போகிறது வட கிழக்கு பருவ மழை**



'வட கிழக்கு பருவ மழை, ஒரு வாரம் தள்ளிப் போகலாம்' என, தெரிவிக்கப்பட்டு உள்ளது.தென் மேற்கு பருவ மழை செப்டம்பரில் முடிவடைந்தது. இதையடுத்து, தமிழகத்துக்கு மழை தரும், வட கிழக்கு பருவ மழை, அக்டோபர், மூன்றாவது வாரத்தில் துவங்கும். நடப்பு ஆண்டில், அக்., 19, 20ல், வட கிழக்கு பருவ மழை துவங்கலாம் என, எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், 'அதற்கான அறிகுறிகள் இப்போது இல்லை' என, இந்திய வானிலை மற்றும் நில அறிவியல் துறை தெரிவித்துள்ளது. அத்துறை வெளியிட்டுள்ள அறிக்கை:அக்டோபர் முதல், டிசம்பர் வரை, தமிழகம், கடலோர ஆந்திரா, ராயலசீமா, கடலோர கேரளா மற்றும் உள் கர்நாடகாவில், வட கிழக்கு பருவ மழை மூலம், சராசரியாக, 33.2 செ.மீட்டர் மழை பெய்யும். குறிப்பாக, தமிழகத்தில், சராசரியாக, 43.8

செ.மீட்டர் மழை பெய்யும்.தற்போது, வட கிழக்கு பருவ மழை துவங்கவில்லை. அடுத்த, ஐந்து நாட்களுக்கும் அதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது. காற்றழுத்த மேல் அடுக்கு சுழற்சி காரணமாக, அடுத்த, 24 மணி நேரத்தில், தமிழக கடலோர பகுதிகள் மற்றும் உள் மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளது. இதன் பின், மழை பெய்ய வாய்ப்பு இல்லை. 23ம் தேதி வரை, மழைக்கு வாய்ப்பு இல்லை. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.வானிலை ஆய்வு மைய அறிவிப்பை பார்க்கையில், வட கிழக்கு பருவ மழை அடுத்த வாரம் துவங்கலாம் என, எதிர்பார்க்கப் படுகிறது

## மேட்டூர் அணையின் நீர்திறப்பு குறைக்கப்பட்டது

மேட்டூர் : மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு, வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடியிலிருந்து 10 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 500 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது. மேட்டூர் அணையின் நீர்வரத்து, 1,608 கனஅடியாகவும், நீர்மட்டம் 63.77 அடியாகவும், நீர் இருப்பு 27.57 டி.எம்.சி.,யாகவும் உள்ளது.

## சிவகங்கையில் சிக்கியஅரிய வகை கூகை ஆந்தை



சிவகங்கை:சிவகங்கையில் சிக்கிய அரிய வகை கூகை ஆந்தையை வனத்துறையினர் மீட்டு காட்டிற்குள் விட்டனர்.சிவகங்கை காந்திவீதியில் காகங்கள் விரட்டியபடி ஆந்தை ஒன்று சிக்கியது. அப்பகுதியினர் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். வன அலுவலர் குருசாமி, வனவர் செல்லமணி ஆந்தையை மீட்டு, சிவகங்கை அருகே முத்துப்பட்டியில் உள்ள காட்டிற்குள் விட்டனர். வனவர் செல்லமணி கூறுகையில்,“ தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் குளிர்ச்சியான இடங்களில் கூகை ஆந்தை வளரும். குறிப்பாக கிணறுகளில் குளிர்ச்சி இருக்கும் என்பதால், அங்குள்ள 'பொந்துகளில்' வாழும். தற்போது மழையின்றி கிணறுகள் வறண்டதால், வெப்பம் தாங்க முடியாமல் வெளியேறி, குளிர்ச்சியான இடங்களை நோக்கி நகர்ந்துள்ளது. அப்படி வந்தபோது தான், சிவகங்கையில் சிக்கியுள்ளது. இதன் வயது ஒன்று. வனத்துறைக்கு சொந்தமான காப்பு காட்டிற்குள் விட்டுவிட்டோம்,” என்றார்.

**கூட்டுறவு கடைகளில் துவரம் பருப்பு விற்பனை: ஒரு கிலோ ரூ.110க்கு வழங்க ஜெ., உத்தரவு**



சென்னை :'தமிழகத்தில், 91 விற்பனை அங்காடிகளில், ஒரு கிலோ துவரம் பருப்பு, 110 ரூபாய்க்கு விற்பனை செய்யும் திட்டம், நவம்பர் முதல் தேதி துவக்கப்படும்' என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். **இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கை:**அத்தியாவசிய பொருட்களின் விலை, வெளிச்சந்தையில் உயரும் போது, விலையை கட்டுக்குள் வைக்கவும்; நுகர்வோருக்கு தரமான பொருட்கள், நியாயமான விலையில் கிடைக்கவும், 'விலை நிலைப்படுத்தும் நிதியம்' என்ற அமைப்பு, 100 கோடி ரூபாயுடன், 2012ல் துவக்கப்பட்டது.கடந்த ஆண்டில், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, மிளகாய், புளி போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலை, வெளிச்சந்தையில் உயர்ந்தபோது, விலை நிலைப்படுத்தும் நிதியம் பயன்படுத்தப்பட்டு, கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம், அந்தப் பொருட்கள், விற்பனை செய்யப்பட்டன.துவரம் பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பை, குறைந்த விலையில் விற்கும் திட்டம், மே, 24ல், முதல்வர் ஜெயலலிதாவால் துவக்கப்பட்டது. இத்திட்டம் மூலம், 25 கூட்டுறவு விற்பனை மையங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் வாணிப கழக அங்காடிகளில், துவரம் பருப்பு அரை கிலோ, 53.50 ரூபாய்க்கும்; உளுந்தம் பருப்பு, 'ஏ' ரகம் அரைகிலோ, 56 ரூபாய்க்கும்; 'பி' ரகம், 49.50 ரூபாய்க்கும்

விற்கப்பட்டது.சமீபத்தில், பருப்பு அதிகம் உற்பத்தி செய்யப்படும், வட மாநிலங்களில், பருவ மழை பொய்த்தது. இதன் காரணமாக, பருப்பு வகைகள் போதிய அளவு உற்பத்தியாகவில்லை. எனவே, துவரம் பருப்பு விலை, வெளிச்சந்தையில் அபரிமிதமாக உயர்ந்துள்ளது. இந்த விலையேற்றத்தை கட்டுப்படுத்த, மத்திய அரசு, வெளிநாட்டில் இருந்து, 5,000 டன் முழு துவரை, இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளது.'அதில், 500 டன், தமிழகத்திற்கு ஒதுக்க வேண்டும்' என, மத்திய அரசிடம், முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்தார். அதை ஏற்று, மத்திய அரசு, 500 டன் துவரையை வழங்கி உள்ளது. அது, அரவை ஆலை மூலம், துவரம் பருப்பாக மாற்றப்பட்டு, கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் நடத்தப்படும், பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம், விற்பனை செய்யப்படும். துவரம் பருப்பு பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு, அரை கிலோ பாக்கெட், 55 ரூபாய்; ஒரு கிலோ பாக்கெட், 110 ரூபாய் என, விற்கப்படும். சென்னையில், 36 கூட்டுறவு பண்டக சாலை, 20 அமுதம் விற்பனை அங்காடி என, மொத்தம், 56 விற்பனை நிலையங்களில், பருப்பு விற்பனை செய்யப்படும்.மதுரையில், 11; திருச்சியில், 14; கோவையில், 10 விற்பனை அங்காடி என, தமிழகம் முழுவதும், 91 விற்பனை அங்காடிகளில், நவ., 1ம் தேதி முதல், துவரம் பருப்பு விற்பனை செய்யப்படும். இது தவிர, ரேஷன் கடைகளில், குடும்ப அட்டைக்கு வழங்கப்படும், ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ உளுந்தம் பருப்பு, 30 ரூபாய்க்கும்; ஒரு லிட்டர் பாமாயில், 25 ரூபாய்க்கும் தொடர்ந்து வழங்கப்படும் என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தனியார் நிலத்தில் சந்தன மரம் வளர்ப்பதை ஊக்குவிக்க ரூ.10 கோடி ஒதுக்கீடு:அமைச்சர் ஆனந்தன் தகவல்**

அன்னூர்:"தனியார் நிலத்தில் சந்தன மரம் வளர்ப்பதை ஊக்குவிக்க, ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது," என வனத்துறை அமைச்சர் ஆனந்தன் தெரிவித்தார்.

அன்னூரில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது:தனியார் தொண்டு நிறுவன ஒத்துழைப்போடு, திருப்பூரில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நட திட்டமிட்டு, 60 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. உள்ளாட்சி துறை மூலம் தமிழகத்திலுள்ள, 12 ஆயிரத்து 524 ஊராட்சிகளிலும், மரக்கன்றுகள் நட தீர்மானிக்கப்பட்டுள்ளது.வன விலங்குகள் மனித மோதலை தடுக்க கோவை, நீலகிரி, திருநெல்வேலி, தர்மபுரி, கிருஷ்ணகிரியில், அதிவிரைவு குழுக்கள் அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் அங்கேயே நிரந்தரமாக தங்கி, வனவிலங்கு மனித மோதல் நடக்கும் இடத்துக்கு, விரைந்து சென்று தடுப்பு பணியில் ஈடுபடுவர். இதற்காக முதல்வர், 8.50 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்.தனியாரும் தங்கள் நிலத்தில் சந்தன மரம் வளர்க்கலாம் எனும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சந்தன மரம் வளர்ப்பதை ஊக்குவிக்க, ஒரு ஆண்டுக்கு, 10 கோடி ரூபாய் வீதம், 10 ஆண்டுகளில், 100 கோடி ரூபாய் ஒதுக்கும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. அவிநாசி - அத்திக்கடவு திட்டத்துக்கு, மத்திய அரசு இன்னும் ஒப்புதல் தராமல் இருக்கிறது. இவ்வாறு, அமைச்சர் ஆனந்தன் கூறினார்.

கோவை மாவட்டம் அன்னூரில் வனத்துறை அமைச்சர் ஆனந்தன் கூறியதாவது:

சந்தன மரம் வளர்க்க விரும்புவோர், தங்கள் மாவட்டத்திலுள்ள வனமரபியல் கோட்டத்தை அனுகலாம். வனத்துறை சார்பில், சந்தன

நாற்றுகள் வழங்கப்பட்டு, தனியார் நிலத்தில் நட்டும் தரப்படும்.நிலத்தின் உரிமையாளர் சந்தன மரத்தை பராமரித்து வர வேண்டும். 25 ஆண்டுகளுக்கு பின், முதிர்ச்சி அடைந்த சந்தன மரத்தை, வனத்துறை எடுத்துக் கொள்ளும். அப்போது அந்த சந்தன மரத்துக்கு என்ன மதிப்பு உள்ளதோ, அதில் மூன்றில் ஒரு பங்கு தொகை, சந்தன மரத்தை பராமரித்த தனியாருக்கு வழங்கப்படும்.இந்த திட்டம் கோவை, சேலம், தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவ்வாறு, அமைச்சர் தெரிவித்தார்.

## கொப்பரை விலை உயர விவசாயிகள் காத்திருப்பு:நிரந்தர விலைக்கு நடவடிக்கை தேவை

பொள்ளாச்சி:தீபாவளி பண்டிகை வர உள்ள நிலையில், சரிந்துள்ள கொப்பரை விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் காத்திருக்கின்றனர். நிரந்தர விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப் பகுதிகளில், தென்னை சாகுபடி அதிகளவு உள்ளது. இப்பகுதியில் இருந்து உள்ளூர் மட்டுமின்றி, வெளியூர், வெளி மாநிலங்களுக்கும் தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. போதிய லாபம் கிடைத்து வந்ததால், விவசாயிகள் தென்னை சாகுபடியில் ஆர்வம் காட்டி வந்தனர்.கடந்த சில ஆண்டுகளாக, பருவமழை எதிர்பார்த்த அளவிற்கு கைகொடுக்காததால், தென்னை சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டது. போதிய விலையில்லாதது மற்றும் வறட்சியால் தென்னை மரங்கள் பாதிப்பு போன்ற பிரச்னைகளினால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதனால், மார்க்கெட்டிற்கு தேங்காய் வரத்தும்

முற்றிலும் குறைந்தது.இதன் விலையும் நிலையில்லாமல், மார்க்கெட்டில், ஏற்றம், இறக்கமாகவே காணப்பட்டது. மேலும், கடந்த சில ஆண்டுகளாக காணப்பட்ட வறட்சி போன்ற காரணங்களினால், தேங்காய் மற்றும் கொப்பரை வரத்து குறைவால், மார்க்கெட்டில் இவற்றின் விலை உயர்ந்து காணப்பட்டது.விலை நன்றாக கிடைத்ததால், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்திருந்தனர்.இந்த நிலையில், கொப்பரை கடந்த சில மாதங்களாக விலை சரிந்தது. நிலையான விலையில்லாததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். காங்கேயம் மார்க்கெட்டில் நேற்று நிலவரப்படி, முதல் தர கொப்பரை, 73 ரூபாய்க்கும்; இரண்டாம் தரம் 70-72 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஒரு டன் முதல் தர தேங்காய், 21 ஆயிரத்து 500 ரூபாய்க்கும்; இரண்டாம் தர தேங்காய், 20 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.ஒரு கிலோ பவுடர், 106 ரூபாய்க்கும், ஒரு டின் எண்ணெய் தற்போது, 1,500 ரூபாய்க்கும்; இரண்டாம் தர எண்ணெய் 1,480 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

'வியாபாரிகள் சிண்டிகேட்டால் விலை சரிவு'

தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலச்சங்க பிரதிநிதி கப்பளாங்கரை தங்கவேலு கூறியதாவது:

கேரளாவில், ஜன., பிப்., மார்ச் போன்ற மாதங்களும்; தமிழகத்தில், மார்ச், ஏப்., மே போன்ற மாதங்களும்; கர்நாடகாவில், ஜூன், ஜூலை, ஆகஸ்ட் போன்ற மாதங்களும் தென்னை சீசனாக உள்ளது.


இந்த மாதங்களில், தேங்காய் மற்றும் கொப்பரை அதிகளவு மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக கொண்டு வரப்படும்.

வறட்சி போன்ற பிரச்னைகளினால், மார்க்கெட்டிற்கு வரத்து மிகவும் குறைந்ததால் கொப்பரை மற்றும் தேங்காய்க்கு நல்ல விலை கிடைத்தது. தற்போது, வரத்து மற்றும் வியாபாரிகள் 'சிண்டிகேட்' அமைப்பது

போன்ற காரணங்களினால், கொப்பரை, தேங்காய், எண்ணெய் விலையும் சரிந்து வருகிறது.

தற்போது, விசேஷ நாட்கள், தீபாவளி பண்டிகை போன்ற நாட்கள் வர உள்ள நிலையில், கொப்பரைக்கு நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்த்து காத்திருக்கிறோம். நிலையில்லா விலை பிரச்னைக்கு தீர்வு காண அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு, தங்கவேலு கூறினார்.

## சூரியனில் 'மெகா' துளை: 'நாசா' கண்டுபிடிப்பு



வாஷிங்டன்:அக்டோபர், 10ல், சூரியனின் வளிமண்டலத்தில், மிகப் பெரிய துளை உருவானதை, அமெரிக்காவின் சூரிய கண்காணிப்பு ஆய்வகம் படம் பிடித்திருக்கிறது. பூமியின் சுற்றளவை விட, 50 மடங்கு பெரிதாக இருக்கும் இந்த துளை, தற்காலிகமானதுதான் என்கின்றனர், அமெரிக்க விண்வெளி அமைப்பான, 'நாசா'வின் விஞ்ஞானிகள். சூரியனிலிருந்து, பெருமளவு ஆற்றலும், வாயுக்களும் எப்போதும் வெளியேறியபடியே இருக்கும். இந்த வெளிப்பாடு சற்று குறைவாக இருக்கும் பகுதி, ஒரு பெரிய துளை போலத் தோற்றம் தரும். இந்தப்

பகுதியிலிருந்து, மிக வேகமான சூரியக் காற்று வெளிப்பட்டு, பூமியை நோக்கி வரும். இதை, 'பூகோள காந்தப் புயல்' என, வானியல் வல்லுனர்கள் அழைக்கின்றனர்.இந்தப் புயல், பூமியின் காந்தப் புலத்தோடு மோதும்போது, ஆற்றல் கடத்தப்படுகிறது. இது, 'அரோரா' என்ற அழகிய ஒளி ஜாலத்தை வானில் ஏற்படுத்தும். அக்., 10ல், படம் பிடிக்கப்பட்ட துளையால், நார்வேயில், அருமையான அரோரா காட்சி, வானில் அரங்கேறியது.சூரியனில் ஏற்படும் காந்தப் புயலால், பூமியில் சில பாதிப்புகள் ஏற்படும். குறிப்பாக ரேடியோ, ரேடார் மற்றும் ஜி.பி.எஸ்., எனப்படும், இருக்குமிடத்தை அடையாளம் காட்டும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் செயல்பாடுகள் பாதிக்கப்படும். சூரிய காந்தப் புயல், விலங்குகள் மற்றும் பறவைகளின் திசை அறியும் திறனிலும், தடுமாற்றங்களை உண்டாக்கும். வானில் பறக்கும் புறாக்கள் முதல், கடலின் ஆழத்தில் உள்ள திமிங்கிலங்கள் வரை, அனைத்தும் குழம்பிப்போவதுண்டு. சூரியப் புயலின் போதுதான் திமிங்கிலங்கள் திசைமாறி கடற்கரைக்கு வந்து உயிரை மாய்த்துக் கொள்கின்றன. இந்த சூரிய காந்தப் புயல், இன்னும் பல மாதங்களுக்கு நீடிக்கும் என்பதால், அடுத்து கனடா, கிரீன்லாந்து, ரஷ்யா மற்றும் ஸ்காண்டினேவிய பகுதிகளில் அரோரா ஒளி ஜாலம் ஏற்படும் என, நாசா கணித்துள்ளது. இந்த வண்ணக் கலவையான அரோராக்களை படம்பிடிக்க, வானியல் புகைப்பட பிரியர்கள் காத்திருக்கின்றனர்.

## காய்கறி பயிரில் அதிக மகசூல் வேளாண் துறை ஆலோசனை

திருவள்ளூர் : குறைந்த தண்ணீரில், காய்கறி பயிரில் அதிக மகசூல் பெறுவதற்கு, வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்ட மூத்த வேளாண் அலுவலர் ஞானசேகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

திருவள்ளூர் மாவட்டத்தில், மழையின்மையால் தற்போது தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. காய்கறி விதைத்த பின், தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க, தண்ணீர் பற்றாக்குறை உள்ள இடங்களில், குறைந்த தண்ணீரைக் கொண்டு காய்கறி பயிர் சாகுபடி செய்து, அதிக லாபம் பெறலாம். இதற்காக விவசாயிகள், காய்கறி விதைகளின் முளைப்பு திறனை அறிந்து பயிரிட வேண்டும்.எனவே, விவசாயிகள் தாங்கள் பயிரிட விரும்பும் வெண்டைக்காய், சுரைக்காய், பூசணி, வெள்ளரி, தர்பூசணி, விதைகளில், 100 கிராம் மற்றும் கீரை, தக்காளி, கத்திரி, மிளகாய் விதைகளில், 10 கிராம் வீதம் மாதிரி எடுத்து, திருவள்ளூர் மாவட்ட விதை பரிசோதனை ஆய்வகத்தில் அளித்து, முளைப்பு திறனை அறிந்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மஞ்சள் பயிர் சாகுபடி பரப்பளவுகுறைந்தது:தண்ணீர் பற்றாக்குறையால் தவிப்பு**

தியாகதுருகம்;மஞ்சள் பயிருக்கு எதிர்பார்த்த விலை கிடைக்காததாலும், பருவமழை குறைந்து விட்டதாலும், கள்ளக்குறிச்சி பகுதியில் சாகுபடி பரப்பு வேகமாக குறைந்து வருகிறது.

கள்ளக்குறிச்சி பகுதியில் மஞ்சள் பயிர் பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது. வயலில் கிழங்கு நடவு செய்து ஒரு ஆண்டில் பலன் கிடைக்கிறது. இதனை பராமரிப்பது எளிதாக இருந்தாலும் ஆண்டு முழுவதும் சீரான தண்ணீர் பாய்ச்சுவது அவசியம்.

மருத்துவ குணம் கொண்ட மஞ்சள் கிழங்கு முறையாக பதப்படுத்தப்பட்டு, சமையலுக்கு அதிக அளவில் பயன்படுத்தபடுகிறது. மருந்து தயாரிப்புக்கும் முக்கிய மூலப்பொருளாக பயன்படுத்துவதால் இதன் தேவை, நாளும் அதிகரித்து வருகிறது.

இதனால் விவசாயிகள் ஆர்வமுடன் இதனை பயிரிட்டதால், சாகுபடி பரப்பு அதிகரித்தது. விவசாயிகளின் தேவையை உணர்ந்து கள்ளக்குறிச்சியில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் மஞ்சள் மார்கெட் துவக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை குறைந்து நீர்வளம் பாதிக்கப்பட்டதால் ஆண்டுமுழுவதும் தண்ணீர் தேவையுள்ள மஞ்சளை பயிரிடுவதில் சிக்கல் ஏற்பட்டது.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணற்று நீர் பாசனம் கேள்விக்குறியானதால், சில இடங்களில் கிழங்கு முற்றும் தறுவாயில் தண்ணீர் பாய்ச்ச முடியாமல், செடிகள் காய்ந்து நஷ்டம் ஏற்பட்டது. இதனால் மஞ்சள் சாகுபடி பரப்பு படிப்படியாக குறைய துவங்கியது.

இதை அறுவடை செய்து கிழங்கை பக்குவப்படுத்தி விற்பனை செய்வது மிக சிக்கலானதாக இருப்பதால், கூலியாட்களை நம்பி இப்பயிரை சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

கிழங்கை அறுவடை செய்து அதனை வேகவைத்து, பின்னர் பாலிஷ் செய்ய வேண்டும். கூடுதல் விலை கிடைக்கும் தருணத் தில் விற்பனை செய்ய வேண் டும். இச்சூழலில் மஞ்சளுக்கு ஈரோடு மார்கெட் விலையை விட கள் ளக்குறிச்சி விலை குறைவாக இருந் ததால் விவசாயிகள் நேரடியாக வாகனங்களில் ஈரோடு எடுத்து சென்றனர். இதன் காரணமாக வரத்து குறைந்து கள்ளக்குறிச்சி மஞ்சள் சந்தை மூடப்பட்டது.

தற்போது ஒரு குவிண்டாலுக்கு 5 ஆயிரம் ரூபாய் மட்டுமே கிடைப்பதாக விவசாயிகள் ஆதங்கப்படுகின்றனர். இதனால் எதிர்பார்த்த லாபத்தை பெற முடியவில்லை என கவலைப்படுகின்றனர்.

தண்ணீர் பற்றாக்குறை உள்ள இத்தருணத்தில் ஆண்டு முழுவதும் பராமரித்து நீர் பாய்ச்ச முடியாததால் கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் மஞ்சள் பயிரிடுவதை தவிர்த்து வருகின்றனர். இதன் காரணமாக தகுந்த

மண்வளம் இருந்தும், பல்வேறு பிரச்னைகளால் மஞ்சள் சாகுபடி பரப்பு வேகமாக குறைந்து வருகிறது.

### மரக்கன்று நடும் விழா

கன்னிவாடி,:கோனூர் அருகே வெல்லம்பட்டியில் விவேகானந்தர் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில், இளைஞர் எழுச்சிதினத்தை முன்னிட்டு மரக்கன்று நடும் விழா நடந்தது. தலைவர் மகுடீஸ்வரன் தலைமை வகித்தார். நிர்வாகிகள் மகுடீஸ்வரன், வினோத்குமார், ஜோதிமணி, மனோஜ்குமார், அருள்ஜோதி முன்னிலை வகித்தனர். ஒருங்கிணைப்பாளர் மணிவண்ணன் வரவேற்றார்.கோனூர் ஊராட்சி தலைவர் மயில்வாகனன், மரக்கன்று நடுதலை துவக்கி வைத்தார். அப்துல்கலாம் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

### திராட்சை பழங்களில் வெடிப்பை தடுக்க பயன்படும் தொழில்நுட்பம்ஆராய்ச்சி நிலையம் அறிவிப்பு

உத்தமபாளையம்: திராட்சை பழங்களில் ஏற்படும் வெடிப்பை தவிர்க்க என்ன செய்ய வேண்டும் என்ர தொழில்நுட்பத்தை ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.அதன் தலைவர் பேராசிரியர் பார்த்திபன், உதவி பேராசிரியர் சுப்பையா கூறியிருப்பதாவது : கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்யப்படும் திராட்சையில் செவட்டை நோய், பழம் வெடித்தல் போன்ற பிரச்னைகள்ஏற்பட்டு விவசாயிகளை பாதிப்படையச் செய்கிறது. இந்த பிரச்னைகளில் இருந்து விவசாயிகள் விடுபட முதலில் வேர்க்குச்சிகளை பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஜனவரி மாதமும் நடவு செய்ய வேண்டும். ஆறு மாதம் கழித்து ஒட்டுக் கட்ட வேண்டும். இவ்வாறு செய்தால் பாதிப்புகள் இருக்காது. பழங்களில் வெடிப்பு ஏற்படும் போது கால்சியம் நைட்ரேட்டை ஒரு லிட்டர் தண்ணீரில் 10 கிராம் கலந்து,

பட்டாணி சைஸ் இருக்கும்போது தெளிக்க வேண்டும். கலர் மாறும் போது மற்றொரு முறை தெளிக்க வேண்டும். 15 நாள் கழித்து மேலும் ஒரு முறை தெளிக்க வேண்டும். 15 நாள் இடைவெளியில் "சல்பேட் ஆப் பொட்டாஷ்' 2 முறை தெளிக்கலாம். ஒரு கொடிக்கும் 50 கிராம் வீதம் தரையிலும் போடலாம். இவ்வாறு செய்தால் பழம் நல்ல கலரிலும் இனிப்பு தன்மை 18 முதல் 20 பிரிக்ஸ் அளவில் கிடைக்கும். ஒரு கொத்தில் 90 முதல் 110 பழங்கள் இருக்க வேண்டும். அதிகமாக இருந்தால் பிஞ்சு விடும்போது கத்தரியால் வெட்டி விட வேண்டும். ஒரு கொடியில் 40 முதல் 50 கொத்துக்கள் இருக்க வேண்டும். திராட்சை கொடிகள் மற்றும் பழங்களில் மழைநீர் படுவதால், வெடிப்பு ஏற்படுவதில்லை. நிலத்தில் ஈரப்பதம் அதிகரிக்கும் போது வெடிப்பு ஏற்படும். அதாவது, மழைநீரில் அதிக அளவு இனிப்பு இருப்பதால், நிலத்தில் தேங்கும் தண்ணீரை வேர்கள் உறிஞ்சி பழத்திற்கு கொண்டுபோய் சேமித்து வைக்கும். அப்போது பிரஷர் தாங்காமல் வெடிப்பு ஏற்படும். எனவே, விவசாயிகள் மழை காலங்களில் கருப்பு நிற பாலிதீன் சீட்டுக்களை வாங்கி திராட்சை தோட்டங்களில் விரித்து விட்டால் தண்ணீர் நிலத்திற்குள் இறங்காது. பழங்களில் வெடிப்பு ஏற்படாது. இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர். மேலும் திராட்சை சாகுபடி தொடர்பான சந்தேகங்களை ஆராய்ச்சி நிலையத்தின் வேலைநேரங்களில் விவசாயிகள் நேரடியாகவும் வந்து கேட்டு தெரிந்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளனர்.

**உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் நடவடிக்கை : வேளாண்மைத்துறை எச்சரிக்கை**

ராமநாதபுரம்: ""உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும்" என, வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி எச்சரித்தார். அவர் கூறியதாவது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை துவங்கிய நிலையில் விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளன. மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் நெல் விதைப்பு துவங்கியுள்ளது. 53 ஆயிரம் எக்டேரில் விதைத்த நெல் 10 முதல் 15 நாள் பயிராக உள்ளது. கலெக்டர் நந்தகுமார் அறிவுறுத்தல்படி மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், உரிமம் பெற்ற தனியார் உரக்கடைகளில் 3,933 டன் யூரியா, 1,939 டன் டி.ஏ.பி., 235 டன் பொட்டாஷ், 1,511 டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பில் உள்ளன.

மானாவாரி நெல் சாகுபடி ஏக்கருக்கு 44 கிலோ யூரியா, கண்மாய், ஆயக்கட்டு பகுதி நெல் சாகுபடி ஏக்கருக்கு 66 கிலோ யூரியா உரமிட்டால் போதும். வேப்பம் புண்ணாக்கு கலந்து யூரியா உரம் 50 கிலோ மூடை ரூ.284 க்கு விற்கப்படுகிறது. தழைச்சத்து உரங்களை அதிகம் பயன் படுத்துவதால் பயிர்களில் பூச்சி தாக்குதல் ஏற்படும். விற்கப்படும் உரங்களுக்கு விவசாயிகள் பெயரில் விற்பனையாளர்கள் ரசீது வழங்க வேண்டும்.

நிர்ணயித்த விலையில் உரங்களை விற்க வேண்டும். இருப்<பு, விலை விபரத்தை பொதுமக்கள் பார்வைக்கு எழுதி வைக்க வேண்டும். கூடுதல் விலை, தரமற்ற உரம் விற்றால் விற்பனையாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தரமான உர விநியோகத்தை கண்டறிய மாவட்ட கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. உரம் தொடர்பான புகார்களை வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகள் தெரிவிக்கலாம், என்றார்.

## மரம் வளர்ப்பு கருத்தரங்கம்

காரைக்குடி: மித்திரங்குடி அரசு பள்ளியில் மரம் வளர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் ஐரின் ஜான் தார்க் தலைமையில் நடந்தது. ராஜசேகர் முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் திருமுருகு, செந்தில்குமார், காஜா முகைதீன் பேசினர். சுற்று சூழல் மன்ற பொறுப்பாளர் கண்ணன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை அ.மு.மு.முருகப்ப செட்டியார் ஆராய்ச்சி நிறுவனம் செய்திருந்தது.

### மழையில்லாததால் நெல் விதை விற்பனை சரிவு

திருப்புத்தூர்: திருப்புத்தூர் வட்டாரத்தில் போதிய மழை இல்லாததால் வேளாண் அலுவலக விதை விற்பனை குறைவாக உள்ளது. நல்ல மழை பெய்த போது, கடந்த 90ம் ஆண்டுகளில் ஆண்டிற்கு 16டன் நெல் விதை விற்பனையானது.

2008ல் 26 டன் நெல் விதை விற்பனையானது. தற்போது இதுவரை சுமார் 6 டன் நெல்விதை விற்பனையாகியுள்ளது.10 டன் விதை நெல் இருப்பில் விவசாயிகள்விற்பனைக்காக உள்ளது. அக்டோபர் மாதத்திற்குள் நல்ல மழை பெய்து கண்மாய் பெருகினால், மட்டுமே விதைகள் விற்பனையாகும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. மழை தாமதமாக பெய்தால், விவசாயிகள் விதைக்காமல், நேரடியாக நாற்றை வெளி மாவட்டங்களில் வாங்கி நடும் நிலை உருவாகி விடும். தற்போது தானியங்களின் விதைகளை சேமிக்கும் பழக்கம் குறைந்த நிலையில், விதைகள் கட்டாயமாக வாங்க வேண்டிய நிலை விவசாயிகளுக்கு உள்ளது. இந்நிலையில்,விதை விற்பனை வெகுவாக குறைந்துள்ளதால், இந்த ஆண்டும் இப்பகுதியில் நெல்சாகுபடி வெகுவாக குறைந்துள்ளதையே காட்டுகிறது.

### சிவகாசியில் 36 மி.மீ., மழை

விருதுநகர்: மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெப்பச்சலனம் காரணமாக மழை பெய்துவருகிறது. நேற்று காலை 8.30 மணிப்படி

மழையளவு(மி.மீ.,): சாத்தூர் 4, ஸ்ரீவி.,6, சிவகாசி 36, ராஜபாளையம் 12, காரியாபட்டி .6, வத்திராயிருப்பு 4, கோவிலாங்குளம் 8. விருதுநகரில் மாலையில் மழை பெய்தது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு குறைப்பு**

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு, வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடியிலிருந்து 10 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது.

அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 500 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது. மேட்டூர் அணையின் நீர்வரத்து, 1,608 கனஅடியாகவும், நீர்மட்டம் 63.77 அடியாகவும், நீர் இருப்பு 27.57 டி.எம்.சி.,யாகவும் உள்ளது என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கடலோர மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பல இடங்களில் செவ்வாய்க்கிழமை மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: தென் கிழக்கு வங்கக் கடல், குமரிக் கடல் பகுதிகளில் இரு வேறு காற்று மேலடுக்கு சுழற்சிகள் உருவாகியுள்ளன. இதன் காரணமாக,

திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட ஒரு சில மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது.

கடந்த 24 மணி நேரத்தில், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அறந்தாங்கியில் 70 மி.மீ. மழையும், தூத்துக்குடியில் 60 மி.மீ. மழையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மயிலாடி, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை, பாபநாசம், மணிமுத்தாறில் 50 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளன.

தென் மேற்குப் பருவ மழை முடிவு: தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா உள்ளிட்ட தென் மாநிலங்களில், திங்கள்கிழமை முதல் தென் மேற்குப் பருவ மழை முடிவடைந்துள்ளது. ஆகையால், வட கிழக்குப் பருவ மழையானது, அடுத்து வரும் வாரங்களில் தொடங்குவதற்கான அதிக வாய்ப்புள்ளது.

தென் கிழக்கு வங்கக்கடல், குமரிக்கடல் பகுதியில் நிலவும் காற்று மேலடுக்கு சுழற்சியால், அடுத்த இரண்டு நாள்களுக்கு மழை பெய்யும். கடலோரத் தமிழகத்தில் பல இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் செவ்வாய்க்கிழமை மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்த வரை, பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இருப்பினும், நகரின் ஒரு சில இடங்களில் மாலை அல்லது இரவில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது என்றனர்.

## 3,000 டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு



சில்லறை விலையில் விற்கப்படும் துவரம் பருப்பின் விலை கிலோவுக்கு ரூ.200-ஆக அதிகரித்துள்ள நிலையில், 2,000 டன் துவரம் பருப்பையும், 1,000 டன் உளுந்தையும் இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து மத்திய நுகர்வோர் அமைச்சகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாவது:

நாட்டில் போதிய அளவு பருவமழை பெய்யாதது, பருவம் தவறிய மழை போன்ற காரணங்களினால் 2014-15ஆம் ஆண்டில் பருப்பு உற்பத்தி 20 லட்சம் டன் அளவுக்கு குறைந்தது. இதனால், பருப்பு வகைகளின் விலை கடந்த சில மாதங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், சில்லறை விலையில் விற்பனை செய்யப்படும் துவரம் பருப்பின் விலை திங்கள்கிழமை கிலோவுக்கு ரூ.200ஆக அதிகரித்தது. இந்த விலையானது, கடந்த வாரத்தில் ரூ.185-ஆகவும், கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் ரூ.85-ஆகவும் இருந்தது.

உளுந்தின் விலையும், சில்லறை விலையில் கிலோவுக்கு ரூ.170-ஆக விற்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் இதன் விலையானது ரூ.98-ஆக இருந்தது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருப்பு வகைகளின் விலை அதிகரித்து வருவதை கட்டுப்படுத்தும் வகையில், வெளிநாடுகளில் இருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்தல், பருப்பு வகைகளைப் பதுக்குவதற்கு தடை விதித்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருகிறது.

இதனிடையே, பருப்பு விலை அதிகரித்து வருவதைத் தடுக்க, 3,000 டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மேலும், பருப்பு வகைகளைப் பதுக்குபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, நுகர்வோர் நலம், விவசாயம், வர்த்தகம் உள்ளிட்ட துறைகளின் செயலர்களுடன் மத்திய அமைச்சரவைச் செயலர் திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினார். மேலும், அனைத்து மாநிலத் தலைமைச் செயலர்களுடனும் காணொலி முறையில் பேசினார்.

இதைத் தொடர்ந்து, மத்திய அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், 2,000 டன் துவரம் பருப்பையும், 1,000 டன் உளுந்தையும் இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 5,000 டன் துவரம் பருப்பு ஏற்கெனவே இறக்குமதி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### துவரம் பருப்பின் விலை கிலோவுக்கு ரூ.200 ஆக அதிகரிப்பு

சில்லறை விலையில் விற்கப்படும் துவரம் பருப்பின் விலை கிலோவுக்கு ரூ.200-ஆக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து மத்திய நுகர்வோர் அமைச்சகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாவது:

நாட்டில் போதிய அளவு பருவமழை பெய்யாதது, பருவம் தவறிய மழை போன்ற காரணங்களினால் 2014-15ஆம் ஆண்டில் பருப்பு உற்பத்தி 2 மில்லியன் டன் அளவுக்கு குறைந்தது. இதனால், பருப்பு வகைகளின் விலை கடந்த சில மாதங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், சில்லறை விலையில் விற்பனை செய்யப்படும் துவரம் பருப்பின் விலை திங்கள்கிழமை கிலோவுக்கு ரூ.200ஆக அதிகரித்தது. இந்த விலையானது, கடந்த வாரத்தில் ரூ.185-ஆகவும், கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் ரூ.85-ஆகவும் இருந்தது. அதேபோல், கடந்த 5 ஆண்டுகளாக துவரம் பருப்பின் விலை கிலோவுக்கு ரூ.74 முதல் ரூ.85 வரையிலேயே விற்பனை செய்யப்பட்டு வந்தன.

உளுந்தின் விலையும், சில்லறை விலையில் கிலோவுக்கு ரூ.170-ஆக விற்கப்படுகிறது. கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் இதன் விலையானது ரூ.98-ஆக இருந்தது. அதேசமயம், கடந்த வாரம் உளுந்து ரூ.187-ஆக விற்கப்பட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருப்பு வகைகளின் விலை அதிகரித்து வருவதை கட்டுப்படுத்தும் வகையில், வெளிநாடுகளில் இருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்தல், பருப்பு வகைகளைப் பதுக்குவதற்கு தடை விதித்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்தது. இருப்பினும், துவரம் பருப்பு, உளுந்து விலை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது.

அதேசமயம், பருப்பு வகைகளின் விலை அதிகரிப்பால் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக தில்லியில் கேந்திரியா பண்டார், மதர் டெய்லி சஃபல் விற்பனை நிலையங்கள் மூலம் இறக்குமதி பருப்பு வகைகள் விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல், ஆந்திர மாநில அரசும், தமிழக அரசும் இறக்குமதி பருப்பு வகைகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன.

இதனிடையே, பருப்பு வகைகள் பதுக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், அவற்றின் இருப்பு அளவுக்கு மத்திய அரசு ஞாயிற்றுக்கிழமை உச்சவரம்பு நிர்ணயித்தது.

**வண்டலூர் உயிரியல் பூங்கா இன்று செயல்படும்**

தொடர் விடுமுறையை முன்னிட்டு, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி சிறுவர் பூங்கா ஆகியன செவ்வாய்க்கிழமை செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை பராமரிப்புப் பணிகளுக்காகப் பூங்கா விடுமுறை தினமாகும். எனினும், தொடர் விடுமுறையை முன்னிட்டு அக்டோபர் 20-இல் பூங்காக்களுக்கு விடுமுறை இல்லை.

எனவே, அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி சிறுவர் பூங்கா ஆகியன வழக்கம் போல் செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நத்தம் பகுதியில் கோடை மாங்காய் அறுவடை**

நத்தம் பகுதியில் தற்போது கோடை மாங்காய் அறுவடை செய்யும் பணி நடந்து வருகிறது.

நத்தம் பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் உள்ள மாந்தோப்புகளில் மாம்பழ சீசன் ஆண்டுதோறும் ஏப்ரலில் தொடங்கி ஜூலையில் முடிவுக்கு வரும். இந்நிலையில் இயற்கை மாற்றத்தினாலும், அவ்வப்போது பெய்யும் மழையினாலும் மாமரங்கள் ஆங்காங்கே பூ பூத்து, காயாகி அறுவடையாகி வருகின்றன.

தற்போது விளையும் இந்த கோடை மாங்காய் அதிக புளிப்புத்தன்மையும், துவர்ப்பும் நிறைந்ததாக உள்ளது. கல்லாமை ரக மாங்காய் ஒரு கிலோ ரூ.80க்கும், பாலாமணி மற்றும் நாட்டு மாங்காய் ரகங்கள் ரூ.50க்கும் விற்பனையாகின்றன. இந்த மாங்காய் அறுவடை ஜனவரி வரை இருக்கும். தவிர இவற்றை மதுரை, திண்டுக்கல், திருச்சி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் நத்தம் பகுதிக்கு வந்து செல்லும் போது வாங்கிச் செல்கின்றனர்.

**சாத்தூரில் பலத்த மழை**

சாத்தூர் பகுதியில் கடந்த சில நாள்களாக கடுமையான வெயில் சுட்டெரித்து வந்தது. திங்கள்கிழமை காலை முதலே மேகமூட்டம் காணப்பட்டது. பிற்பகல் 2 மணிக்கு மேல் மழை பெய்யத் தொடங்கியது. சுமார் அரை மணி நேரம் பெய்த மழையால் இப்பகுதி மக்கள் மகிழ்சியடைந்தனர்.

சாத்தூர் பிரதான சாலை, பேருந்து நிலையம், நீதிமன்றம் முன்பு, பைபாஸ் சாலை, மதுரை பேருந்து நிறுத்தம், முக்குராந்தல் உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. சில இடங்களில் மழைநீருடன் கழிவு நீரும் கலந்ததால் துர்நாற்றம் வீசியது.

மழைக் காலங்களில் சாலையில் தண்ணீர் தேங்காமலிருக்க நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாத்தூர் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருந்திய நெல் சாகுபடி பண்ணைப் பள்ளி தொடக்கம்

வத்தலகுண்டு வட்டாரம் சேவுகம்பட்டி பேரூராட்சி வாடிப்பட்டியில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான திருந்திய நெல் சாகுபடி பண்ணைப் பள்ளியை, திண்டுக்கல் வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார்

திங்கள்கிழமை தொடங்கி வைத்து நெல் நாற்றங்கால் வயலை பார்வையிட்டார்.

அப்போது வத்தலகுண்டு வேளாண்மை உதவி இயக்குநர் அ.கோபால்ராஜ், விதை நேர்த்தி தொழில் நுட்பங்கள், நாற்றாங்கால் தயாரிப்பு, நில தயாரிப்பு பற்றி விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காட்டினார். மேலும் தேனி குள்ளபுரம் வேளாண் தொழில் நுட்ப கல்லூரி மாணவிகள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் கலந்து கொண்டு கலந்துரையாடல் நடத்தி நெல் நாற்றங்கால் தயாரிப்பில் ஈடுபட்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர் கண்ணன் செய்திருந்தார்.

## இயந்திரம் மூலம் நெல் நடவுக்கு மானியம்

இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகள் அரசு மானியம் பெற லாம் என மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பாய் நாற்றங்கால் அல்லது நாற்று தட்டுகளில் நாற்றுக்களை வளர வைக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 100 சதுர மீட்டர் அளவு நாற்றங்காலில் ஏக்கருக்கு 15 கிலோ சான்று பெற்ற விதைகளை விதைக்க வேண்டும். விதைத்து 12-15 நாள்களில் நாற்றுகள் நடவிற்கு தயாராகி விடும். நடவு செய்வதற்கு முன், வயலை நன்கு சேற்றுழவு செய்து சமப்படுத்தி, சேற்றை 1-2 நாட்களுக்கு அப்படியே விட்டுவிட வேண்டும்.

கீழ்மட்ட மண் போதுமான அளவு கடினமாக இருத்தல் அவசியம். அப்போதுதான் நடவு இயந்திரம் வயலில் நடவு செய்ய முடியும். சேற்றுழவு செய்த மண்ணில், குச்சி கொண்டு ஆங்கில வி போன்ற சிறு அடையாளம் உண்டாக்கினால், அது அப்படியே இருப்பின் மண் நடவிற்கு தயார் நிலையில் உள்ளது என்பதை அறியலாம். இந்த ஈரப்பத

நிலையில், மண் நாற்றுக்களை பிடித்துக் கொள்ளும் திறன் பெற்றிருக்கும். மிகவும் உலர் மண்ணாக இருந்தால் நடவு இயந்திரத்தின் சக்கரம் மற்றும் மற்ற பாகங்களில் ஒட்டிக் கொள்ளும். பாய் நாற்றுக்களை நடவு இயந்திரத்தில் வைத்து அதில் 22.5. க்கு 22.5 செ.மீ. இடைவெளி இருக்கும்படி நடவு செய்தல் வேண்டும்.

இயந்திர நடவில் கை நடவை விட குறைந்த நேரம் மற்றும் குறைந்த ஆள்களே போதுமானது. சீரான இடைவெளி மற்றும் பயிர் எண்ணிக்கை உறுதிப்படுத்தப்படுகிறது. நாற்றுக்கள் விரைவாக வளர்ந்து, வேகமான தூர்கள் பிடித்து, சீராக முதிர்ச்சியடைகிறது. பாய் நாற்றாங்கால் அல்லது குழித்தட்டு நாற்றங்கால் அமைத்து இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட நெல் இயக்கத்தின் கீழ் ஏக்கருக்கு ரூ.1200 பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது. எனவே மாவட்டத்தில் உள்ள நெல் பயிரிடும் விவசாயிகள் இயந்திர நடவு முறையை பயன்படுத்தி நெல் சாகுபடி செய்து, அதிக விளைச்சல் பெற்று கூடுதல் வருமானம் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

## அக்.30-இல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அக்டோபர் 30-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெறவுள்ளது.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள முதன்மைக் கூட்டரங்கில் ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில், விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான பிரச்னைகள் குறித்து தெரிவிக்கலாம்.

## விவசாயிகளுக்கு பண்ணைப் பயிற்சி

மொடக்குறிச்சி அருகே வேளாண்மைதுறை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப் பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

மொடக்குறிச்சியை அடுத்த உத்தண்டிபாளையம் விவசாயப் பண்ணையில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு, மொடக்குறிச்சி வேளாண்மை உதவி இயக்குநர் குழந்தைவேலு தலைமை வகித்தார்.

வேளாண்மை அலுவலர் சியாம்சுந்தர், விதைநேர்த்தி முறைகள் குறித்தும், மொடக்குறிச்சி வட்டார தொழில்நுட்ப மேலாளர் கோமதி, பண்ணைப்பள்ளியின் முக்கியத்துவம், விதை தேர்வு முறைகள் குறித்தும், உதவி வேளாண்மை அலுவலர் சுலோசனா, மண்மாதிரி சேகரிப்பு முறைகள் குறித்தும் விளக்கம் அளித்தனர்.

முன்னோடி விவசாயி நல்லசிவம் மேட்டுபாத்தி செயல் விளக்கம் குறித்து விளக்கி பேசினார். வாணவராயர் வேளாண்மை கல்லுரி மாணவர்கள் ஜாகீர் உசேன், வினோத், விஷ்ணு ஆகியோர் ஒற்றை நாற்று நடவு முறைகள் குறித்து பேசினர். பயிற்சி முகாம் தொடர்ந்து நடைபெறுகிறது.

**பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார்களின் விலை உயர்வு**

பரமத்தி வேலூர் வாழைத்தார் ஏல சந்தையில் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜையை முன்னிட்டு, வாழைத்தார்களின் விலை உயர்ந்ததால், வாழை சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

பரமத்தி வேலூர் காவிரி கரையோர பகுதிகளில் அதிகளவு விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர். இங்கு விளையும் வாழைத்தார்கள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள், சேலம், கோவை, ஈரோடு, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் தினமும் லாரிகள் மூலம் அனுப்பப்படுகிறது. மேலும், விவசாயிகள் பலர் பரமத்தி வேலூரில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை நடைபெறும் வாழைத்தார் ஏலச் சந்தைக்கு கொண்டு வந்து நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர். சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜையை

முன்னிட்டு, இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமையும் வாழைத்தார் ஏலச் சந்தை நடைபெற்றது.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.300-க்கும், ரஸ்தாலி ரூ.300-க்கும், பச்சைநாடன் ரூ.200-க்கும், கற்பூரவள்ளிரூ.250-க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.5-க்கு விற்பனையானது.

திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைத்தார்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், பூவன் அதிகபட்சமாக ரூ.550-க்கும், ரஸ்தாலி ரூ.450-க்கும், பச்சைநநாடன் ரூ.300-க்கும், கற்பூரவள்ளி ரூ.350-க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.7-க்கு விற்பனையானது.

ஆயுத பூஜையை முன்னிட்டு, வாழைத்தார்களை ஏலம் எடுப்பதுக்கு சேலம், தருமபுரி, ஈரோடு, திண்டுக்கல், பழனி, கரூர், நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வந்திருந்ததால் வாழைத்தார்களின் விலை உயர்ந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## ஆயுத பூஜை: சேலத்தில் பூக்களின் விலை உயர்வு

ஆயுத பூஜை உள்ளிட்ட பண்டிகை காலத்தை முன்னிட்டு, சேலத்தில் அனைத்துப் பூக்களின் விலையும் திங்கள்கிழமை உயர்ந்து காணப்பட்டது. குறிப்பாக, ரூ.90-க்கு விற்பனையான சாமந்தி பூ ரூ.250-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சேலம் மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள பல்வேறு பகுதிகளிலிருந்து மொத்த, சில்லறை வியாபாரிகள், பொதுமக்கள் ஆயுத பூஜையை முன்னிட்டு பூக்கள் வாங்குவதற்காக சேலம் வ.உ.சி. சந்தையில் அதிகளவில் திரண்டனர். சந்தையில் பண்டிகை காலத்தை முன்னிட்டு, பூக்களின் விலை உயர்ந்து காணப்பட்டாலும், பொதுமக்கள் அதிகளவில் பூக்களை வாங்கிச் சென்றனர்.

இதுகுறித்து சேலம் வ.உ.சி. சந்தையில் பூக்கடை வைத்துள்ள பி.மோகன்குமார் கூறியது:

கடந்த சில மாதங்களாக சேலத்துக்கு வரும் பூக்களின் வரவு குறைந்துள்ளது. வரத்து குறைவு, தொடர்ச்சியாக முகூர்த்த நாள்கள், ஆயுத பூஜை உள்ளிட்ட பண்டிகை காலங்களை முன்னிட்டு, அனைத்துப் பூக்களின் விலையும் அதிகரித்து காணப்படுகிறது என்றார்.

சேலம் வ.உ.சி. சந்தையில் திங்கள்கிழமை விற்பனையான பூக்களின் விலை நிலவரம் கிலோவில் (அடைப்புக்குறிக்குள் இரு வாரங்களுக்கு முன்பு இருந்த விலை):

சாமந்தி - ரூ.90 (250)

குண்டு மல்லி - ரூ.140 (300)

செண்டுமல்லி - ரூ.30 (100)

முல்லை - ரூ.150 (280)

கனகாம்பரம் - ரூ.280 (600)

அரளி - ரூ.100 (300)

சம்மங்கி - ரூ.80 (220)

கலர் ரோஜா - ரூ.70 (200)

தாமரை (ஒரு பூ) - ரூ.4 (10)

## வேம்பு பூசிய யூரியா பயன்படுத்த விவசாயிகளுக்கு வேண்டுகோள்

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், வேம்பு பூசப்பட்ட யூரியாவை பயன்படுத்த வேண்டும் என வேளாண்மை இணை இயக்குநர் இல. பெருமாள் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் கூறியது: விவசாயிகள் வேம்பு பூசப்பட்ட யூரியாவை பயன்படுத்துவதன் மூலம் தழைச்சத்து விரயம் ஆகும் நிலை உருவாகாது. வேம்பு சார்ந்த யூரியாவை பயன்படுத்துவதால் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் குறையும். பயிர்களுக்கு தழைச்சத்து படிப்படியாக

அதிகரிக்கும். 5 முதல் 10 சதவீதம் அதிகரிக்கும். எனவே, மத்திய, மாநில அரசுகளும் யூரியா உற்பத்தி செய்யும் நிறுவனங்களிடம் வேம்பு பூசப்பட்ட யூரியாவை 75 சதவீதம் உற்பத்தி செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தனியார் உர விற்பனை நிலையங்களில் வேம்பு பூசப்பட்ட யூரியா விற்பனை செய்யப்படுகிறது. இந்த யூரியாவையும், வேப்பம் புண்ணாக்கையும் 5-க்கு 1 என்ற விகிதத்தில் கலந்து பயிருக்கு மேலுரமாக அளிக்கலாம். விவசாயிகள் யூரியா, வேப்பம்புண்ணாக்கை கலந்து அளிக்க முடியாத நிலையில் வேம்பு பூசிய யூரியா மிகச் சிறந்த பயனளிக்கும் என்றார் அவர்.

## இயற்கை வேளாண்மை: விவசாயிகளுக்கு ஆலோசனை

சங்கராபுரம் அருகே மாதிரி கிராமத்தில் இயற்கை வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு திங்கள்கிழமை ஆலோசனை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை மூலம் விழுப்புரம் மாவட்டத்தில் மாதிரி கிராமமாக, சங்கராபுரத்தை அடுத்த பூட்டை கிராமம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இக்கிராமத்துக்கு திங்கள்கிழமை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரத்தினசபாபதி, மாவட்ட உதவி இயக்குநர் சண்முகம் ஆகியோர் வந்தனர். இவர்கள்

விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்து ஆலோசனைகள் வழங்கினர்.

இயற்கை வேளாண் முறையை கடைப்பிடிக்க வேண்டும். மண்புழு உரம், பசுந்தாள் உரப் பயிர்களான தக்கப்பூண்டு, சனப்பை, அவுரி ஆகியவற்றைப் பயிரிட்டு மண்ணின் வளத்தை மேம்படுத்த வேண்டும்

என அறிவுறுத்தினர். மேலும், குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்டிடும் வகையில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

அப்போது வட்டார வேளாண்மை அலுவலர் விஜயகுமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் முத்துக்கருப்பன், அப்பாஸ், நாசர், மைக்கேல், ஜெயப்பிரதா, பழனிவேல், செந்தில்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

**வேளாண் மாணவர்கள் பட்டறிவு பயணம்**

காரைக்காலில் உள்ள பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பி.எஸ்சி (வேளாண்மை) இறுதியாண்டு படிக்கும் மாணவர்கள் பட்டறிவு கல்வி பயணமாக கடலூர் அருகே உள்ள குணமங்கலத்தில் முகாமிட்டுள்ளனர்.

3 மாத ஊரக வேளாண் பணி அனுபவமாக மாணவர்கள் எஸ்.திருமேனிநாதன், ஆர்.கருணாபிரபு, என்.உமாமகேஸ்வர், கே.நைமுதீன், என்.சிவமணி, கே.திருவேங்கடம் ஆகியோர் முகாமிட்டு, விவசாயிகளிடம் வேளாண்மை குறித்த விளக்கம் கேட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக குணமங்கலத்தில் செயல்முறை விளக்கப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

இதில், கரும்பு ஆராய்ச்சி நிலைய பூச்சியல் துறை பேராசிரியர் எஸ்.துரைசாமி தலைமை வகித்து, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்துப் பேசினார். அதில், இன கவர்ச்சிப் பொறிகளைப் பயன்படுத்தி இலை சுருட்டு புழு மற்றும் தண்டு துளைப்பான்களில் ஆண் அந்துப் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறை, டிரைகோகிராமா ஒட்டுண்ணி அட்டை பயன்பாட்டின் முக்கியத்துவம், பயன்படுத்தும் முறை, இயற்கை முறை பூச்சி கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விளக்கினார்.

முன்னதாக திருந்திய நெல் சாகுபடி குறித்து மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கினர். இதில் குணமங்கலம் மற்றும் சுற்றுவட்டார கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

தினத்தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

**விலை வீழ்ச்சி காரணமாக கோதுமை மீதான சுங்க வரி உயர்வு மத்திய அரசு நடவடிக்கை**



புதுடெல்லி,

சர்வதேச சந்தையில் கோதுமையின் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது. இதனால் பாதிக்கப்படும் விவசாயிகளை காப்பாற்றுவதற்காக, கோதுமை மீதான சுங்க வரியை 10 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக மத்திய நிதி அமைச்சகம் நேற்று உயர்த்தியது. அடுத்த ஆண்டு மார்ச் 31–ந் தேதிவரை, இது அமலில் இருக்கும்.

**விலை உயர்வை கட்டுப்படுத்த மேலும் 3 ஆயிரம் டன் பருப்பு இறக்குமதி மத்திய அரசு நடவடிக்கை**



புதுடெல்லி,

விலை உயர்வை கட்டுப்படுத்த வெளிநாட்டில் இருந்து ஏற்கனவே 5 ஆயிரம் டன் துவரம் பருப்பை மத்திய அரசு இறக்குமதி செய்து உள்ளது. இந்த நிலையில், மேலும் 2 ஆயிரம் டன் துவரம் பருப்பையும், ஆயிரம் டன் உளுந்தம் பருப்பையும் இறக்குமதி செய்ய மத்திய அரசு தீர்மானித்து உள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளி விரைவில் கோரப்படும்.

டெல்லியில் மத்திய மந்திரிசபை செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் வேளாண்மை, நுகர்வோர் விவகாரம், வர்த்தக துறை செயலாளர்களும் மற்றும் மாநில அரசின் தலைமைச் செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

டெல்லியில் அரசு விற்பனை நிலையங்கள் மூலம் கடந்த 4 நாட்களில், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 200 குவிண்டால் துவரம் பருப்பு கிலோ ரூ.120 விலையில் விற்பனை செய்யப்பட்டு இருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வேளாண் உற்பத்தியில் ஆப்பிரிக்காவுடன் இணைந்து செயல்பட இந்தியா விருப்பம்; மத்திய மந்திரி சுரேஷ் பாபு தகவல்



புதுடெல்லி,

இந்தியா-ஆப்பிரிக்கா நாடுகளுக்கு இடையேயான உச்சி மாநாடு வரும் 26-ந்தேதி டெல்லியில் நடைபெற உள்ளது. இந்நிலையில், வேளாண் உற்பத்தியில் ஆப்பிரிக்காவுடன் இணைந்து செயல்பட இந்தியா அதிக விருப்பத்துடன் உள்ளதாக மத்திய மந்திரி சுரேஷ் பாபு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இன்று டெல்லியில் அசோசெம் நடத்திய கூட்டத்தில் அவர் பேசியவை பின்வருமாறு:-

ஆப்பிரிக்காவில் நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தியா 120 கோடி மக்கள்தொகையை கொண்டது. பொருளாதார ரீதியில் வேளாண்மை துறை மற்றும் தொழிற்துறையில் இந்தியா-ஆப்பிரிக்கா இணைந்து செயல்பட அதிக வாய்ப்புள்ளது. தனியார் மட்டுமில்லாது அரசுத்துறைகளிலும் ஆப்பிரிக்காவுடன்

இணைந்து செயல்பட இந்தியா தயாராக உள்ளது. வளர்ச்சி அடிப்படையில் பார்த்தால் உலகிலேயே அதிவேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடு இந்தியாதான். வேளாண் உற்பத்தியில் இருநாடுகளும் இணைந்து செயல்பட அதிக முன்னுரிமை கொடுக்கப்படும்.இவ்வாறு அவர் தெரிவித்தார். ஆப்பிரிக்காவுடன் தற்போது இந்தியா 75 பில்லியன் டாலர்கள் அளவுக்கு வர்த்தகம் செய்து வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் ஆப்பிரிக்காவில் 7.4 பில்லியன் டாலர்கள் மதிப்பில் இந்தியா உதவியுடன் கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள் நடந்துள்ளது. 41 ஆப்பிரிக்க நாடுகளில் 137 பிராஜக்ட்டுகள் இந்தியாவால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## நாளை ஆயுத பூஜை: கோயம்பேடு மார்க்கெட்டில் பழங்கள், பூக்கள் விலை கிடு கிடு உயர்வு ரோஜா, மல்லி, கனகாம்பரம் விலை 2 மடங்கு அதிகரிப்பு



சென்னை,

நாளை ஆயுதபூஜை பண்டிகையையொட்டி, சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் பழங்கள் மற்றும் பூக்களின் விலை ‘கிடு கிடு’வென உயர்ந்து உள்ளது. ரோஜா, மல்லி, கனகாம்பரம் பூக்களின் விலை 2 மடங்கு அதிகரித்து உள்ளது.

ஆயுத பூஜை

நாளை (புதன்கிழமை) ஆயுதபூஜை பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. இதன் காரணமாக பழங்கள் மற்றும் பூக்களின் விலை அதிரடியாக உயரத்தொடங்கி இருக்கிறது.

குறிப்பாக ஆப்பிள், சாத்துக்குடி, ஆரஞ்சு உள்ளிட்ட பழ வகைகள் விலை ‘கிடு கிடு’வென உயரத்தொடங்கி உள்ளது. பிற பழங்களின் விலையும் ரூ.10 வரை அதிகரித்துள்ளது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் அங்காடிக்குழு உறுப்பினர் பழக்கடை ஜெயராமன் கூறியதாவது:–

பழங்கள் விலை உயர்வு

ஆயுத பூஜை, விஜயதசமி உள்ளிட்ட பண்டிகை காலத்தையொட்டி பழங்களின் தேவை அதிகரித்து உள்ளது. கடந்த 3 நாட்களில் மட்டும் பழங்கள் விலையில் பெரிய மாறுபாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஆப்பிள், சாத்துக்குடி, ஆரஞ்சு பழங்கள் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த வாரம் ரூ.70 முதல் ரூ.120 வரை விற்பனையான, ஒரு கிலோ ஆப்பிள் தற்போது ரூ.90 முதல் ரூ.140 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ரூ.25 முதல் ரூ.35 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ சாத்துக்குடி தற்போது ரூ.35 முதல் ரூ.45 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆரஞ்சு, அன்னாசிபழம், கொய்யாப்பழம், மாதுளம்பழம் உள்ளிட்ட பழங்களின் விலை கிலோவுக்கு ரூ.10 வரை அதிகரித்து உள்ளது.

கூடுதல் விற்பனை

எனவே தேவைகளை கருத்தில்கொண்டு தற்போது கூடுதல் லாரிகள் மூலம் பழ வகைகளை இறக்குமதி செய்ய திட்டமிட்டு இருக்கிறோம். கடந்த ஆண்டை காட்டிலும் இந்தாண்டு ஆயுத பூஜை விற்பனை சதவீதம் கூடுதலாக இருக்கும் என்று நம்புகிறோம்.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட பழங்களின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:–

ஆப்பிள் – ரூ.90 முதல் ரூ.140 வரை, மாதுளம் பழம் – ரூ.90 முதல் ரூ.130 வரை, சாத்துக்குடி – ரூ.35 முதல் ரூ.45 வரை, ஆரஞ்சு – ரூ.35 முதல் ரூ.45 வரை, திராட்சை – ரூ.60 முதல் ரூ.70 வரை, கொய்யாப்பழம் – ரூ.50, சப்போட்டா – ரூ.50, தர்பீஸ் – ரூ.15, அன்னாசி பழம் (காய் ஒன்று) – ரூ.40 முதல் ரூ.50 வரை, வாழைப்பழம் (தார் ஒன்று) – ரூ.200 முதல் ரூ.300 வரை.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>வரத்து குறைவு</u>

பழங்களின் விலையை போலவே, பூக்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்துள்ளது. வரத்து–விளைச்சல் குறைவு காரணமாகவும், பண்டிகை கால தேவை காரணமாகவும் பூக்கள் விலை அதிகரித்து உள்ளது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு மலர் மொத்த வியாபாரிகள் சங்கத்தலைவர் எம்.டி.அருள் விசுவாசம் கூறியதாவது:–

கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் வரத்து–விளைச்சல் குறைவு காரணமாக பூக்களின் விலை அதிகரித்து உள்ளது. ஆயுத பூஜை பண்டிகையையொட்டி ரோஜா, மல்லி, கனகாம்பரம் உள்ளிட்ட பூக்களின் விலை 2 மடங்கு அதிகரித்து உள்ளது. பிற ரக பூக்களின் விலையும் ரூ.30 முதல் ரூ.70 வரை உயர்ந்துள்ளது. ஆயுதபூஜைக்கு முதல்நாள் வரையிலே வியாபாரம் என்பதால் நாளை இன்னும் பூக்களின் விலை அதிகரிக்கக்கூடும்.

<u>விலை நிலவரம்</u>

சென்னை கோயம்பேடு பூ மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட பூக்களின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:–

மல்லி – ரூ.200, முல்லை – ரூ.180, ஜாதிமல்லி – ரூ.150, ரோஜா – ரூ.140, சாமங்கி – ரூ.150, செண்டு மல்லி – ரூ.80, அரளி – ரூ.250, பஞ்சு ரோஸ் (20 பூ கொண்ட ஒரு கட்டு) – ரூ.70, சம்மங்கி (லில்லி பிளவர்) – ரூ.150, கனகாம்பரம் – ரூ.400, மருகு (கட்டு) – ரூ.5, மரிக்கொழுந்து – ரூ.20.

இவ்வாறு அவர் கூறினார்.

**ஆயுத பூஜையை முன்னிட்டு பொள்ளாச்சியில் கரும்பு கட்டு, பூக்கள் விலை கிடு, கிடு உயர்வு**



பொள்ளாச்சி,

ஆயுத பூஜையை முன்னிட்டு பொள்ளாச்சியில் கரும்பு கட்டு ஒன்று ரூ.300–க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் பூக்கள் விலையும் அதிகரித்து உள்ளது.

<u>ஆயுத பூஜை</u>

ஆயுத பூஜை நாளை (புதன்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்களில் வியாபாரிகள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் தாங்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு பூஜை செய்து வழிபடுவார்கள். இதனை தொடர்ந்து 22–ந்தேதி விஜயதசமி பண்டிகையும் கொண்டாடப்பட உள்ளது. ஆயுத

பூஜையை முன்னிட்டு பொள்ளாச்சி கடைவீதி, மார்க்கெட்டுகளில் கரும்பு, வாழைக்கன்று, பூக்கள் ஆகியவை விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டு உள்ளன.

<u>கிடு, கிடு உயர்வு</u>

பொள்ளாச்சியில் விற்பனை செய்வதற்காக நத்தம், திருச்சி, கரூர், அருப்புக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கரும்புகள் வந்து உள்ளன. இதன்படி 15 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு கரும்பு ரூ.300–க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், சில்லறையாக ஒரு கரும்பின் விலை ரூ.25 முதல் ரூ.30–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல் ஒரு ஜோடி வாழைக்கன்று ரூ.40 முதல் ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுதவிர பூக்களின் விலையும் பல மடங்கு உயர்ந்து உள்ளது. மல்லிகைப் பூ கிலோ ரூ.200–க்கும், செண்டுமல்லி கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரையிலும், செவ்வந்தி கிலோ ரூ.200 முதல் ரூ.250 வரையிலும், அரளிப்பூ கிலோ ரூ.200 முதல் ரூ.240 வரையிலும், முல்லை கிலோ ரூ.200 முதல் ரூ.240 வரையிலும், கோழிக்கொண்டை கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரையிலும், சம்பங்கி கிலோ ரூ.160 முதல் ரூ.200 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## விருத்தாசலம் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் 30 ஆயிரம் முந்திரி ஒட்டு கன்றுகள் மானிய விலையில் விற்பனை



விருத்தாசலம்

விருத்தாசலம் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் 30 ஆயிரம் முந்திரி ஒட்டு கன்றுகள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுவதாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

முந்திரி கன்றுகள் உற்பத்தி

விருத்தாசலம் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் உயரகை முந்திரி, மா, பலா, வாழை, மிளகாய் உள்ளிட்ட பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டு, அரசு அறிவிக்கும் திட்டங்களின் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த பண்ணையின் கம்மாபுரம், விருத்தாசலம், நல்லூர், மங்களூர் ஆகிய ஒன்றியங்களை சேர்ந்த விவசாயிகள் கன்றுகளை பெற்றுச் சென்று பயனடைந்து வருகின்றனர்.

தற்போது தேசிய தோட்டக்கலைத்துறை சார்பில் எம்.ஐ.டி.எச்., என்.எச்.எம்., ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தி திட்டம் ஆகிய 3 திட்டங்களின் கீழ் ஆயிரம் முந்திரி கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மானிய விலையில் விற்பனை

இது குறித்து பண்ணையின் மேலாளர் சீனுவாசன் கூறுகையில், தற்போது 30 ஆயிரம் வீரிய ஒட்டு ரக முந்திரி கன்றுகள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன. முந்திரி கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள் உரிய ஆவனங்களை நேரில் கொண்டு வந்து காண்பித்து, தேவையான முந்திரி கன்றுகளை மானிய விலையில் பெற்று பயனடையலாம் என்றார்.

## ஈரோட்டுக்கு 30 டன் பூ வரத்து: ஆயுத பூஜைக்கு பூமாலை கட்டும் பணிகள் தீவிரம்



ஈரோடு,

ஆயுதபூஜையை முன்னிட்டு ஈரோட்டுக்கு 30 டன் பூ கொண்டு வரப்பட்டு உள்ளது. இந்த பூக்களை பூமாலையாக கட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

பூமாலை

ஆயுதபூஜை விழா நாளை (புதன்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி பூஜைக்கான பூமாலை கட்டும் பணி ஈரோட்டில் பல்வேறு

பகுதிகளில் நடந்து வருகிறது. அதன்படி வீரப்பன்சத்திரத்தில் உள்ள தனியார் திருமண மண்படத்தில் பூமாலை கட்டும் பணி நேற்று தொடங்கியது. ஆண்கள், பெண்கள் என பலர் பூமாலை கட்டும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். மாலை கட்டுவதற்காக செவ்வந்தி பூக்கள், கோழி கொண்டை பூக்கள் மற்றும் துளசி இலைகள் குவிக்கப்பட்டு உள்ளன. இதுபற்றி பூமாலை வியாபாரி கண்ணதாசன் கூறியதாவது:–

30 டன்

தர்மபுரி மாவட்டம் ராயக்கோட்டை பகுதியில் இருந்து ஈரோட்டுக்கு சுமார் 30 டன் பூக்கள் கொண்டு வரப்பட்டு உள்ளன. இதில் 3 டன் பூக்கள் எனது தலைமையிலான குழுவினர் பூமாலையாக கட்டும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். 40 பேர் எனது தலைமையில் வேலை செய்து வருகிறார்கள். இதுபோல் ஈரோட்டில் 400 பேர் வரை பூமாலை கட்டும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆயுத பூஜையை முன்னிட்டு பூக்கள் விலையும் கிடு, கிடு உயர்வு



ஊட்டி

ஆயுத பூஜையை முன்னிட்டு ஊட்டியில் பூக்கள் விலை கிடு, கிடு என உயர்ந்து ஒரு கிலோ மல்லிகை ரூ.600–க்கு விற்பனையாகிறது. மேலும், ஒரு கரும்பு ரூ.60–க்கும், ஒரு ஜோடி வாழைக்கன்று ரூ.50 முதல் 60–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

<u>ஆயுத பூஜை</u>

ஆயுத பூஜை நாளை (புதன்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு வாகனங்கள், தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்களில் வியாபாரிகள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் தாங்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு பூஜை செய்து வழிபடுவார்கள். இதனை தொடர்ந்து 22–ந்தேதி விஜயதசமி பண்டிகையும் கொண்டாடப்பட உள்ளது. ஆயுத பூஜையை முன்னிட்டு ஊட்டி மார்க்கெட்டில் கரும்பு, வாழைக்கன்று, பூக்கள் ஆகியவை விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டு உள்ளது.

<u>விலை கிடு, கிடு உயர்வு</u>

ஊட்டியில் கடந்த பொங்கல் பண்டிகைக்கு கரும்பு ஒன்று ரூ.40 முதல் 50 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது ஒரு கரும்பு ஒரு கரும்பின் விலை ரூ.10 உயர்ந்து ரூ.60–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதேப்போல் ஒரு ஜோடி வாழைக்கன்று ரூ.50 முதல் ரூ.60–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுதவிர பூக்களின் விலையும் பல மடங்கு உயர்ந்து உள்ளது. சாமந்தி பூ 7 கிலோ கொண்ட ஒரு கட்டு ஆயிரத்து 800 ரூபாய் முதல் ரூ.2 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து மார்க்கெட் பூ வியாபாரி ராஜா கூறியதாவது:–

<u>பூக்கள் விலை உயர்வு</u>

ஆயுத பூஜை என்பதால் பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. பண்டிகை அல்லாத காலங்களில் ஒரு முழம் ரூ.20–க்கு விற்பனை

செய்யப்படும் சாமந்தி பூ தற்போது முழம் ரூ.60–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன் விலை மேலும் அதிகரிக்கும்.

மல்லிகைப்பூ கிலோ ரூ.600–க்கும், முல்லைப்பூ ரூ.500–க்கும், சென்டு மல்லி ரூ.120–க்கும், வாடா மல்லி ரூ.80–க்கும், சம்மங்கி ரூ.260–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பண்டிகை அல்லாத நாட்களில் அரளி பூ கிலோ ரூ.40 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்படும். ஆனால் தற்போது கிலோ ரூ.350 முதல் ரூ400 வரை விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. மேலும் மாலைகளில் விலையும் அதிகரித்து உள்ளது. இதன்படி சிறிய மாலைகள் ரூ.80–க்கும் சற்று பெரிய மாலைகள் ரூ.120–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மைசூர்

நீலகிரி மாவட்டத்தில் பூக்கள் விளைவது இல்லை. இதனால் மைசூர், மேட்டுப்பாளையம், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து மலர்களை வாங்கி விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால்தான் பண்டிகை காலங்களில் நீலகிரியில் பூக்களின் விலை கிடு, கிடு வென அதிகரித்து விடுகிறது.பண்டிகை நெருங்க, நெருங்க பூக்களின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

கரும்பு, வாழைக்கன்று, பூக்களின் விலை அதிகரித்து உள்ளதால் பொதுமக்கள் இதனை வாங்க சிரமம் அடைந்து வருகின்றனர். குறிப்பாக தித்திக்கும் கரும்பு ஒன்று ரூ.60–க்கு விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்து உள்ளனர்.

## விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கும் நிகழ்ச்சி



குன்னம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு குன்னம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் அந்தூர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். துணை தலைவர் ராமலிங்கம் வரவேற்றார். இயக்குனர் காமராஜ் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் 284 பேருக்கு ரூ.1 கோடியே 3 லட்சம் பயிர் கடனாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் இயக்குனர்கள் கந்தசாமி மணிவண்ணன், சதாசிவம், வேலாயுதம், மாரிமுத்து, தமிழரசன், பாப்பாத்தி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் குன்னம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் சூரியகாந்தி நன்றி கூறினார்.

## சம்பா சாகுபடிக்காக 1,320 டன் யூரியா திருவாரூருக்கு வந்தது



தூத்துக்குடியில் இருந்து சரக்கு ரெயிலில் சம்பா சாகுபடிக்காக 1,320 டன் யூரியா திருவாரூருக்கு வந்தது.

உரம் வினியோகம்

சம்பா சாகுபடி பணிகளுக்கு தேவையான உரத்தை விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி வினியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதை முன்னிட்டு பல்வேறு ஊர்களில் இருந்து டி.ஏ.பி., பொட்டாஷ், யூரியா உள்ளிட்ட உரங்கள் சரக்கு ரெயில் மூலம் திருவாரூருக்கு வரவழைக்கப்பட்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

யூரியா உரம்

நேற்று தூத்துக்குடியில் இருந்து 1,320 டன் யூரியா உரம் சரக்கு ரெயிலில் திருவாரூர் கொண்டு வரப்பட்டது. இந்த உரம் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாக நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு

லாரியில் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த பணியில் ஏராளமான சுமை தூக்கும் பணியாளர்கள் ஈடுபட்டனர். சம்பா சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உரம் தட்டுப்பாடின்றி வினியோகிக்கப்படும் என கூட்டுறவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கன மழை: ராஜபாளையம் அய்யனார் கோவில் ஆற்றில் வெள்ளப் பெருக்கு



மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் திடீரென பெய்த கன மழையின் காரணமாக ராஜபாளையம் அய்யனார் கோவில் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

வெள்ளப் பெருக்கு

ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாததன் காரணமாக வறட்சி நிலவியது. இதனால் மலை அடிவார ஆறுகளில் நீர் வரத்து இன்றி வறண்டு காணப்பட்டது. சில தினங்களாக நகர் பகுதிகளில் மட்டும் மழை பெய்து

வந்தது. இந்தநிலையில் நேற்று மாலை மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள நீராவி அருவி, முள்ளிக்கடவு ஆறு, மாவரசியம்மன் கோவில் பகுதி, வழுக்கு பாறை மற்றும் மலட்டாறு போன்ற பகுதிகளில் கன மழை பெய்தது.

இதன் காரணமாக தற்போது மலையடிவாரத்தில் உள்ள அய்யனார் கோவில் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆற்றின் மறு கரையில் உள்ள புகழ்பெற்ற அய்யனார் கோவிலில் சாமி தரிசனம் செய்ய வந்தவர்கள் ஆற்றை கடந்து செல்ல முடியாமல் பல மணி நேரமாக காத்திருந்தனர். மலைப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், நேரம் செல்லச் செல்ல ஆற்றில் வெள்ளத்தின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எனவே ஆற்றில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

அடிப்படை வசதி

மதுரை, நெல்லை போன்று தொலை தூரத்தில் இருந்து வந்த பக்தர்கள் ஆற்றை கடக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். இந்த பகுதி சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், முக்கிய அம்சமாக ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப் படும் என அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் அறிவிப்பு வந்து 2 ஆண்டுகளுக்கும் மேலாகியும் இது வரை பாலம் கட்ட அரசு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என பக்தர்கள் குற்றம் சாட்டினர் மேலும் எந்த ஒரு அடிப்படை வசதியும் இது வரை அய்யனார் கோவில் பகுதியில் செய்யப் படவில்லை.

மழைக்காலங்களில் இது போன்று வரும் திடீரென வெள்ளத்தால், ஆற்றின் ஒரு புறத்தில் இருந்து, மறு கரைக்கு திரும்ப முடியாமல் ஏராளமானோனர் தவிக்கும் நிலை தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. இதனால் விரைவில் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியை சுற்றுலா

துறையினர் தொடங்க வேண்டும் என்று பக்தர்களும், சுற்றுலா பயணிகளும் அரசுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தமிழகத்தில் தொடர் வறட்சியால்_ மலையடிவார விவசாய நிலங்களில் அழிந்துவரும் நுண்ணுயிர்கள்_: குழி எடுத்து வரப்பு அமைக்க நிபுணர்கள் யோசனை



தமிழகத்தில் 14 மாவட்டங்களில் மேற்கு தொடர்ச்சி மலை, கிழக்கு தொடர்ச்சி மலை மற்றும் பல்வேறு வகையான 73 மலைத்தொடர்கள் சிறிய சிறிய குன்றுகளாக அமைந்துள்ளன. இப்பகுதி மலையடிவார விவசாய நிலங்கள், செம்மண் சரளை நிலமாக உள்ளன. இந்த நிலங்களில் அதிகளவு தோட்டக்கலைப் பயிர்கள், தென்னை மரங்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

**ஆழ்துளை கிணறுகள்**

பொதுவாக மலையடிவாரத்தில் திறந்தவெளி கிணறு, ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் தேங்கவும், நிற்கவும் செய்யாது. ஆனாலும், தோட்டக்கலைப் பயிர்களுடைய நீர் தேவைக்காக, மலையடிவாரப் பகுதிகளில் விவசாயிகள் அதிகளவு திறந்தவெளி கிணறுகள், ஆழ்துளை கிணறுகளும் அமைத்துள்ளனர். பஞ்சாயத் துகளும், தங்களுடைய குடிநீர் தேவைக்காக ஆழ்துளை கிணறுகள் அமைத்து அதிகளவு நீரை உறிஞ்சுகின்றன.

குறைந்த மழையளவு உள்ள இக்காலத்தில் மலையடிவாரத்தில் நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சுவதால் தோட்டக்கலைப் பயிர், மரங்கள் தண்ணீர் இன்றி கருகுவதாக விவசாயிகள் கவலை யடைந்துள்ளனர். இதுகுறித்து நீர் வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் திண்டுக்கல் மாவட்ட விரிவாக்க அலுவலர் பிரிட்டோ ராஜிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:

**நோயிலிருந்து பாதுகாக்க..**

பொதுவாக 3 ஆண்டுகள் வளர்ந்த தென்னை, கொய்யா, மா மரங்களுக்கு தினசரி 100 முதல் 120 லிட்டர் தண்ணீரும், வறண்ட காலங்களில் குறைந்தபட்சம் 60 லிட்டர் தண்ணீரும் தேவையுள்ளது. தொடர்ந்த வருமானத்துக்கும், மரத்தின் ஆயுளை நீட்டிப்பதற்கும், நோயில் இருந்து பாதுகாக்கவும் நீர் இன்றியமையாதது.

**14 மலையடிவார மாவட்டங்கள்**

ஆனால், குறைந்துவரும் நீர் தேவையினால், தரையில் இருந்து ஒன்றரை அடி முதல் இரண்டே முக்கால் அடி வரை ஆழத்தில் அமைந்துள்ள இந்த மரங்கள் மற்றும் பயிர்களுடைய வேர்களுக்கு குறைந்தளவு நீரே செல்கிறது. அதனால், மண்ணில் நுண்ணுயிர்களின் அளவு அழிந்து வருகிறது. 14 மலையடிவார மாவட்டங்களில் சாகுபடி செய்த தென்னை, கொய்யா, மா உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர்கள் காய்ந்தும், அழிந்தும் வருகிறது. இதனால், தமிழகத்தில் 7.5 சதவீத தோட்டக்கலைப் பயிர் சாகுபடி குறைந்துள்ளது.

இந்த நுண்ணுயிர்களைப் பெருக்க நுண்ணுயிர் உரங்கள் அளித்தாலும், தண்ணீர் பற்றாக் குறையால் அவை வளருவதில்லை. வேர்கள் அமைந்துள்ள இடத்தில் நுண்ணுயிர்கள் இருக்க வேண்டும். அதற்கு மண்ணில் ஈரப்பதம் இருந்தால் மட்டுமே நுண்ணுயிர்கள் காணப்படும். வெயில் காலத்தில் செம்மன் சரளை நிலங்கள் அதிகளவு வெப்பமாகும் என்பதால் நுண்ணுயிர்கள் அழிகிறது என்றார்._

**நுண்ணுயிர் பெருக்கத்துக்கு என்ன வழி?**

பிரிட்டோ ராஜ் மேலும் கூறியதாவது:

நுண்ணுயிர்களை அதிகரிக்க மலையடிவாரப் பகுதிகளில் குழி எடுத்து வரப்பு அமைக்க வேண்டும். ஒரு ஹெக்டேர் நிலத்தில் மொத்தம் 200 மீட்டர் நீளத்தில் 20 மீட்டர் நீளம், 0.9 மீட்டர் அகலம், 0.9 மீட்டர் ஆழம் என்றளவில் 5 குழிகள் என்ற விகிதத்தில் இரண்டு அடுக்குகளில் 10 குழிகள் அமைக்கப்பட வேண்டும்.

தோண்டப்பட்ட குழிகளின் கீழ் பகுதிகளில் தொடர்ச்சியான கரை அமைக்க வேண்டும். இதன் மூலம் சரிவின் குறுக்கே ஓடிவரும் மழை நீர் குழிகளில் சேகரிக்கப்பட்டு, ஒரு ஹெக்டேர் நிலத்தில் சுமார் 16,200 லிட்டர் மழை நீரை சேகரிக்கலாம். ஜேசிபி இயந்திரம் கொண்டு இந்த குழிகள் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு 5 முதல் 6 மணி நேரம் என்றளவில் ரூ.4 ஆயிரம் செலவாகிறது.

இம்முறையினால் ஆண்டுக்கு 400 மி.மீ. என்ற குறைந்தளவு மழை கிடைத்தாலே, அந்த நிலத்தின் மேல் மண் ஈரப்பதம் அதிகமாகி மரங்களுக்கு தொடர்ச்சியான நிலத்தடி நீர் கிடைக்கும். வறண்ட மானாவாரி நிலங்கள் உள்ள கிருஷ்ணகிரி முதல் விருதுநகர் வரையிலான 14 மேட்டுப்பகுதி மாவட்டங்கள் இம்முறையை ஏற்படுத்தி பயன்பெறலாம் என்றார்._

## உதவி வேளாண் அலுவலர் பணி நவ.2 நேர்காணல்

உதவி வேளாண் அலுவலர் பணிக்கான எழுத்துத்தேர்வு கடந்த ஏப்ரல் மாதம் 18-ம் தேதி நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, சான்றிதழ் சரிபார்ப்பு முதல்கட்டமாக ஆகஸ்ட் 19-ம் தேதியும் 2-வது கட்டமாக அக்டோபர் 1-ம் தேதியும் நடைபெற்றன.

இந்த நிலையில், உதவி வேளாண் அலுவலர் பணிக் கான நேர்முகத்தேர்வு நவம்பர் 2 முதல் 7-ம் தேதி வரை நடை பெற உள்ளது. இதற்கு அனு மதிக்கப்பட்ட விண்ணப்பதாரர் களின் பதிவெண்கள் அடங்கிய பட்டியல் டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் (www.tnpsc.gov.in) நேற்று வெளி யிடப்பட்டது.

நேர்முகத்தேர்வு குறித்து சம்பந்தப்பட்ட விண் ணப்பதாரர்களுக்கு தனித் தனியே தகவல் அனுப்பப்படும் என்று டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது._

தினகரன்

**டெல்டா மாவட்டங்களில் பரவலான மழை: மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு குறைப்பு**




மேட்டூர்: டெல்டா பாசன பகுதிகளில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணையின் நீர் மட்டம் இன்று காலை நிலவரப்படி, 63.77 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 1,609 கனஅடி நீர் வந்துகொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 10,700 கனஅடி நீர் திறப்பு விடப்படுகிறது. காவிரி டெல்டா பகுதிகளில் தற்போது மழை பெய்து வருவதால் நீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. நேற்றைவிட 2,000 கனஅடி நீர் குறைக்கப்பட்டுள்ளது. குடிநீருக்காக திறந்துவிடப்படும் நீரின் அளவு, 800ல் இருந்து 700 கனஅடி குறைக்கப்பட்டுள்ளது. அணையில் 27.57 டி.எம்.சி. அளவுக்கு நீர் இருப்பு உள்ளது.

**எகிறும் பருப்பு விலையேற்றத்தை தடுக்க 500 டன் ஒதுக்கீடு : அங்காடிகளில் விற்க திட்டம் தமிழக அரசு நடவடிக்கை**



சென்னை: பருப்பு விலை ஏற்றத்தின் காரணமாக, தமிழ்நாடு நுகர்வோர் வாணிப கழகத்தினால் நடத்தப்படும் பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம் வருகிற 1ம் தேதி முதல் துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.110க்கு விற்பனை செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக, 500 டன் பருப்பு ஒதுக்கீடு செய்துள்ளது. சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை அதைத் தொடர்ந்து தீபாவளி, கிறிஸ்துமஸ் என்று பண்டிகை நாட்கள் தொடர்ந்து வருகிறது. பண்டிகை நாட்கள் நெருங்கி வரும் வேளையில் பருப்பு விலை ஜெட் வேகத்தில் அதிகரித்து கிலோ ரூ.250 என்ற புதிய உச்சத்தை தொட்டது.

இந்த விலை உயர்வால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே, காய்கறி உள்ளிட்ட மளிகை பொருட்களின் விலை உயர்வையை சமாளிக்க முடியவில்லை. அப்படி இருக்கும் போதும் பருப்பு விலை உயர்வை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் விளிபிதுங்கி வருகின்றனர். விலை உயர்வை அடுத்து வீடுகளில் சாப்பாடு, இட்லி, தோசைக்கு சாம்பார் பயன்படுத்துவது அடியோடு நிறுத்தப்பட்டுள்ளது. சாம்பாருக்கு பதிலாக வேறு குழம்பினை மக்கள் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். ஓட்டல்களிலும் சாம்பார் பெயரளவுக்கு வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களும் பருப்பு விலை

உயர்வை காரணம் காட்டி வடை, தோசை உள்ளிட்ட பொருட்களின் விலையை உயர்த்த திட்டமிட்டுள்ளனர்.

இந்த நிலையில் பருப்பு விலையை கட்டுப்படுத்தும் வகையில் ◌ெவளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் துவரம் பருப்பில் இருந்து 500 மெட்ரிக் டன் பருப்பை தமிழகத்திற்கு ஓதுக்க வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அரசின் இந்த கோரிக்கையை ஏற்று மத்திய அரசு தமிழகத்துக்கு 500 மெட்ரிக் டன் முழு துவரம் பருப்பை ஓதுக்கியுள்ளது. இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: பருப்பு அதிகம் உற்பத்தி செய்யப்படும் வடமாநிலங்களில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக பருப்பு வகைகள் போதிய அளவு உற்பத்தி செய்யப்படவில்லை. எனவே, துவரம் பருப்பு விலை வெளிச்சந்தையில் தற்போது அபரிமிதமாக உயர்ந்துள்ளது. இந்த விலையேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில் மத்திய அரசு வெளிநாட்டில் இருந்து 5000 மெட்ரிக் டன் முழு துவரை இறக்குமதி செய்ய முடிவெடுத்தது.

இதுபற்றி தெரிந்தவுடன் முதல்வர் ஜெயலலிதா உத்தரவின்படி, வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் துவரையில் இருந்து 500 மெட்ரிக் டன் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என தமிழக அரசால் மத்திய அரசுக்கு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி, மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு 500 மெட்ரிக் டன் துவரையை வழங்க உத்தரவிட்டு, அது சென்னை துறைமுகத்தில் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட துவரை, அரவை ஆலைகள் மூலம் துவரம் பருப்பாக மாற்றப்பட்டு, கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் வாணிப கழகத்தினால் நடத்தப்படும் பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படும். இந்த துவரம் பருப்பு பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு, 1/2 கிலோ

பாக்கெட் 55 ரூபாய்க்கும், 1 கிலோ பாக்கெட் 110 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும். சென்னையில் டியுசிஎஸ், வடசென்னை, சிந்தாமணி மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் 36 கூட்டுறவு பண்டக சாலைகள், 20 அமுதம் விற்பனை அங்காடிகள் என மொத்தம் 56 விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படும். மேலும், மதுரையில் 11 கூட்டுறவு பண்டக சாலை மூலமும், திருச்சியில் 14 பண்டக சாலைகள் மூலமும், கோயம்புத்தூரில் 10 விற்பனை அங்காடிகள் மூலமும் துவரம் பருப்பு விற்பனை செய்யப்படும்.

இந்த விற்பனை 1.11.2015 அன்று துவங்கப்படும். இதுமட்டும் அல்லாமல், பொது விநியோக திட்டத்தின்கீழ் குடும்ப அட்டை ஒன்றுக்கு வழங்கப்படும் ஒரு கிலோ துவரம் பருப்பு, கனடா பருப்பு, ஒரு கிலோ உளுந்தம் பருப்பு தலா கிலோ 30 ரூபாய் என்ற விலையிலும், ஒரு லிட்டர் பாமாலின் எண்ணெய் 25 ரூபாய்க்கும் தொடர்ந்து வழங்கப்படும். தமிழக அரசின் இந்த நடவடிக்கை மூலம் வெளிச்சந்தையில் துவரம் பருப்பு விலை குறைய வழிவகுக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வெறும் கண்துடைப்பு

பருப்பு மொத்த வியாபாரிகள் கூறியதாவது: பருப்பு விலை உயர்வுக்கு பின்னர் தமிழகம் முழுவதும் ஒரு நாளைக்கு 1000 மூட்டை (1 மூட்டை 100 கிலோ) அளவுக்கு விற்பனையானது. தற்போது, இது வெறும் 500 மூட்டைகளாக குறைந்துள்ளது. அதாவது, 50,000 கிலோ வரை மட்டுமே விற்பனையாகிறது. இந்த நிலையில், பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில் 500 மெட்ரிக் டன்(5 லட்சம் கிலோ) மத்திய அரசிடம் இருந்து கொள்முதல் செய்துள்ளது.

500 மெட்ரிக் டன்னை அரவைக்கு அனுப்பும் போது 15 சதவீதம் வரை கழிவு ஏற்பட வாய்ப்புள்ளது.

அதாவது, சுமார் 425 டன் (4.25 லட்சம் கிலோ) அளவுக்கு மட்டுமே பருப்பு கிடைக்கும். அரசின் பருப்பு 9 நாளுக்கு தான் பயன்படும். எனவே, அரசின் இந்த நடவடிக்கை கண் துடைப்பு நாடகம். அங்காடிகளை வசதி படைத்தவர்களும், ஒரு சில நடுத்தர மக்கள் மட்டுமே பயன்படுத்துகின்றனர். இதனால், இந்த கடைகளுக்கு பதிலாக ரேஷன் கடைகளிலும் பருப்பை இதே விலையில் விற்றால் தான் மக்களிடம் சென்றடையும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தமிழக அரசின் அறிவிப்புக்கு விக்கிரமராஜா கண்டனம்

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா கூறியதாவது: ஒரு மாதத்துக்கு தேவை என்பது லட்சம் டன்களை தாண்டும். இதனை பருப்பு விளைச்சல் நடைபெறும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ஸ்டாக் வைத்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு மத்திய, மாநில அரசுகள் செய்வது இல்லை. அது தான் தற்போது பருப்பு தட்டுப்பாடுக்கு உண்மையான காரணம். தட்டுப்பாட்டை போக்க 500 மெட்ரிக் டன் துவரம் பருப்பை மத்திய அரசிடம் இருந்து வாங்கியுள்ளதாக தமிழக அரசு கூறுவது ஒரு வெறும் கண்துடைப்பு நடவடிக்கை தான். இது தமிழக மக்களின் தேவையை பூர்த்தி செய்யாது. டிசம்பர் மாதம் இறுதியில் இந்தியா முழுவதும் பருப்பு விளைச்சல் தொடங்கி விடும். அப்போது, அந்த பருப்பு வந்தால் கூட விலை தானாகவே குறைந்து இருக்கும்.

**முட்டை விலை தொடர்ந்து உயர்வு**




நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் நேற்று, முட்டையின் பண்ணை கொள்முதல் விலையில் மேலும் 6 காசுகள் உயர்த்தப்பட்டது. இதையடுத்து ஒரு முட்டையின் விலை 318 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரே வாரத்தில் 16 காசுகள் உயர்ந்துள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.57க்கும், கறிக்கோழி ஒரு கிலோ ரூ.65க்கும் நிர்ணயம் செய்யப்பட்டது.மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்) ஐதராபாத்- 298, விஜயவாடா- 300, மைசூர்- 328, பெங்களுரு- 325, கொல்கத்தா- 331, டெல்லி- 305 காசுகள். புரட்டாசி மாதம் முடிந்துள்ளதால் முட்டை விற்பனை தமிழகத்தில் அதிகரித்து வருகிறது. இதனால் முட்டை விலை உயர்ந்துள்ளது. இது மேலும் உயர வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

**நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களில் கனமழை**



நெல்லை: நெல்லை, குமரி மாவட்டங்களில் மழை நீடிப்பதால் பாபநாசம், மணிமுத்தாறு அணைகள் மூடப்பட்டுள்ளது. நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களில் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்து வருகிறது. நெல்லையில் நேற்றும் பல்வேறு பகுதிகளில் லேசான சாரல் இருந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் கன மழை பெய்துள்ளதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பரவலான மழை காரணமாக காட்டாற்று பகுதிகளில் இருந்து வரும் தண்ணீர் தாமிரபரணியில் கலக்கிறது.

இதனால் ஆற்றில் தண்ணீர் அதிகரித்து ள்ளதால் பாபநாசம், மணிமுத்தாறு அணைகள் மூடப்பட்டன. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்றும் காலை முதல் பகல் முழுவதும் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. சில இடங்களில் சூறைக்காற்றும் வீசியது. சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி: குற்றாலத்தில் நேற்று காலை வெள்ளப்பெருக்கு கட்டுக்குள் வந்ததையடுத்து அருவிகளில் குளிக்க அனுமதி வழங்கப்பட்டது. மெயினருவியில் பாதுகாப்பு வளைவின் மீதும், ஐந்தருவியில் 5 பிரிவுகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

**மேட்டூர் அணை நீர்மட்டம் சரிவு**



மேட்டூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் 2,779 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று விநாடிக்கு 1,457 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து பாசனத்திற்காக விநாடிக்கு 12,800 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. நேற்று முன்தினம் 66.07 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 64.84 அடியாக சரிந்தது. அணையில் தினமும் ஒரு டிஎம்சி வீதம் தண்ணீர் குறைந்து வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.